விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 248 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 08 ஞாயிற்றுக்கிழமை (24.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


- கொழும்பு தேசிய வைத்தியசாலையின் -

## தீவிர சிகிச்சைப் பிரிவில் ரணில் அனுமதி

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



ரணிலின் கைதால்

## சர்வதேச அழுத்தத்தை எதிர்நோக்கியுள்ள இலங்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்குலக நாடுகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி

04ஆம் பக்கம் பார்க்க

## யார் தவறு செய்திருந்தாலும் சட்டம் தண்டிக்கத் தயார்?

ரணில் கைது தொடர்பில் சிறீதரன் எம்.பி

(கிளிநொச்சி)

யார் தவறு செய்திருந்தாலும் இலங்கையினுடைய சட்டம் தண்டிப்பதற்கு தயாராக இருக்கின்றது என்பதை முன்னாள் ஜனாதிபதியினுடைய கைதிலே உறுதியாக இருக்கின்றது எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம்

23ஆம் பக்கம் பார்க்க

ரணில் கைது

## ஐ.நாவில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுத்துமூல முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடா 23ஆம் பக்கம் பார்க்க

# ரணிலின் கைது

# அரசியல் பழிவாங்கல்

## ரணிலைச் சிறையில் பார்வையிட்ட பின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதானது அநுர அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கலைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## கைதான ரணிலுக்கு வீட்டிலிருந்து உணவு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வீட்டிலிருந்து உணவு வழங்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 23ஆம் பக்கம் பார்க்க

## ஜனநாயகத்தின் மீது மிகப்பெரிய தாக்குதல்

ரணிலைப் பார்வையிட்ட பின் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை ஜனநாயகத்தின் மீது விழுந்த மிகப்பெரிய

04ஆம் பக்கம் பார்க்க

ரணிலின் கைதுக்கு எதிராக

## ஒன்றுகூடும் முன்னாள் ஜனாதிபதிகள்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பாக ஏனைய முன்னாள் ஜனாதிபதிகள் இன்று கொழும்பில் விசேட ஊடக சந்திப்பை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்த ஊடக சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

கொழும்பில் உள்ள ப்ளவர் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நேற்று இது தொடர்பாக விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

04ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி சுண்டிக்குளத்தில் மீனவர் வெட்டிக் கொலை

கைகலப்பு முற்றியதில் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளத்தில் இரு மீனவர்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பு முற்றியதில் மீனவர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் 23ஆம் பக்கம் பார்க்க

தொண்டைமானாறு

## காட்டுப்புலம் கடலில் சடலம் மீட்பு

(கரணவாய்)

தொண்டைமானாறு காட்டுப்புலம் கடலில் இருந்து

23ஆம் பக்கம் பார்க்க

மாங்குளம் பாலைப்பாணியில்

## வெட்டுக்காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைப் பாணி கிராமத்தில் தனிமையில் வசித்த பெண்ணொருவர் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட

23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 விற்பனைக்கு 22

01. யாழ். கே.கே.எஸ் வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 07, 06,04,03, பரப்புக் காணியும்
02. யாழ். கே.கே.எஸ் வீதியில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் அதி நவீன கட்டிடத்துடன் 10 பரப்புக் காணியும்
03. யாழ்.நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
04. யாழ்.நல்லூர் கோவிலுக்கு அண்மையில் குறொஸ் வீதியில் 10பரப்புக் காணியும்
05. யாழ்.கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நாவலர் றோட் முகப்புடன்12 பரப்புக் காணியும்
06. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 06 பரப்புக் காணியும்
07. யாழ்.மின்சாரநிலைய வீதியில் 03, 04, 06 பரப்புக் காணியும்
08. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட 02 கடைகளும்
09. யாழ்.மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்
10. யாழ்.தாவடி ஆனைக்கோட்டை வீதியில் உயரப்புலத்துக்கு அண்மையில் 06 பரப்பில் அமைந்த காணியும் வீடும்
11. யாழ்.மின்சார நிலையவீதியில் CTB தரிப்பிடத்திற்குப் பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட இரண்டு மாடிக் கடைகளும்
12. யாழ். கஸ்தூரியார் வீதியில் கபினா பாட்டாவுக்கும் சாரங்கா நகைக் கடைக்கும் இடையில் 04 கடைகளும்
13. யாழ். ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கும் வின்சர் சந்திக்கும் இடையில் 04 கடைகளும்
14. யாழ். ஆஸ்பத்திரி வீதி சிக்னல் சந்திக்கு அண்மையில் 16 பரப்புக் காணியும்
15. யாழ். ஆஸ்பத்திரி வீதி சிக்னல் சந்திக்கு அண்மையில் 68 பரப்புக் காணியும்
16. யாழ். மன்னார் Town க்கு அண்மையில் அதிநவீன அரிசி ஆலையும் 10 கடைத்தொகுதியும்
17. யாழ்.விக்டோரியா வீதியில் விக்டோரியா வீதி முகப்புடன் 16, 14, 12, 06பரப்புக் காணிகளும்
18. யாழ். வேம்படிப் பாடசாலைக்கு அண்மையில் 12 பரப்புக் காணியும்
19. யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக காந்தி வீதியில் 16 பரப்புக் காணியும்
20. யாழ். தாவடிச்சந்திக்கு அண்மையில் 02 பரப்பில் அமைந்த அதிநவீனமாடிக் கட்டிடமும் காணியும்
21. யாழ். கே.கே.எஸ் வீதி கீரிப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக 2½ பரப்பில் அமைந்த வீடும் காணியும்
22. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதியில் 10 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

**கனகசபை தர்மகுலசிங்கம்**
**இல.185, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
**இல.187, காலி வீதி, வெள்ளவத்தை**

(C-3725)

**077 723 2535**


## ரணிலின்...

கைது செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவை வைத்தியசாலையில் அனுமதிக்க முன் நேற்றுக் காலை சிறைச்சாலையில் பார்வையிட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அரசியல் தலைவர்கள் சிறிய குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்படுவது வருத்தத்திற்குரியது எனவும் தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் சரியான புரிதலைக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

மேலும் இந்த நடவடிக்கைகள் பழிவாங்கும்செயல்களைத் தவிர வேறொன்றும் இல்லை.

மக்கள் அரசியல் தலைவர்களை தொடர்ந்து ஆதரித்து வருவதாகவும் நாம் மக்களை நேசிக்கிறோம். அதனால் தான் மக்கள் நம்மை நேசிக்கிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)


## மணமகள் தேவை

யாழ்., இந்து, கௌரவ குடும்ப,
49 வயது திருமணமாகாத மணமகனுக்குத்
திருமணமாகாத நற்குணமுள்ள தகுந்த
மணமகள் தேவை.

(5119)

**074 242 9737**

## காணி விற்பனைக்கு

யாழ்., அரியாலை நெடுங்குளம் சந்திக்கு
அருகாமையில் A9 பிரதான வீதியில்
09 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.
**மேலதிக விபரங்களுக்கு...**

(5117)

**070 160 2608**

## காணி விற்பனைக்கு

யாழ்., நல்லூர் குறொஸ் றோட்டில், 2 நல்ல
தண்ணீர் கிணற்றுடன் கூடிய 11 பரப்பு
வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.
**மேலதிக விபரங்களுக்கு...**

(5121)

**077 801 5156**



## நாகபூஷணி திருமண சேவை



உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்,
லிங்கா பெஷன் எதிர் ஒழுங்கை)

(C-3729)

**077 138 7596, 071 999 9306**

## மணமகள் தேவை

1988, 1992, 1987, 1993 (லண்டன்), 1986 (அவுஸ்திரேலியா) மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை. மற்றும் உங்கள் தகுதிகளுக்கு ஏற்ற மணமகன், மணமகளின் பொருத்தம் பார்த்துத் தரப்படும்.

(1481)

**076 475 2219** (Viber, (Whatsapp)
**0049 1741 7897 40** (only Whatsapp), **077 889 4353**

## ROOMS அல்லது முழுவீடும் நாள் வாடகைக்கு

திருநெல்வேலியில் ஒவ்வொரு Room இற்கும் தனித்தனி Toilet & Bathroom, AC வசதியுடன் Rooms நாள் வாடகைக்கு அல்லது முழு வீடாகவும் நாள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
முழு வீடாக எடுப்பதாயின் முன் பதிவு செய்ய வேண்டும்.

(5118)

**074 206 0576, 077 959 7158**
**0049 1634 4995 78**

## வாகனங்கள் விற்பனைக்குண்டு



- TVS முச்சக்கரவண்டி – 02
- Hero Pleasure மோட்டார் சைக்கிள்

மேற்குறிப்பிட்ட அனைத்து வாகனங்களும் நல்ல நிலையில் உள்ளன.
நேரடியாக வாகனங்களைப் பார்வையிட்டு விலை மதிப்பீட்டைச் செய்து கொள்ளலாம். (Price Quotation)

(C-3727)

பார்வையிடும் நேரம் : கிழமை நாட்கள் காலை 8.30 – மாலை 4.30

ஆர்வமுள்ளவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும்

**011 258 0166, 077 660 2140**
குடும்ப புனர்வாழ்வு நிலையம், தல்லக்கடி வீதி,
புகையிரத நிலையம், சுன்னாகம், யாழ்ப்பாணம்


## காணவில்லை



கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி சாரதா சவுண்ட் உரிமையாளர் சோமு சின்னையா என்பவரை கோண்டாவில் தொடக்கம் யாழ்ப்பாணம் வரை பலாலி றோட்டில் 22.08.2025 காணாமல் போய்விட்டார்.
கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(1484)

**077 146 3850**
**078 346 8235**


## வாகனம் தேவை

விற்பனைக்கு அல்லது மாத வாடகைக்கு வாகனம் தேவை.
தொடர்புகளுக்கு

(1482)

**078 288 1051**
**075 939 7254**

## அறை வாடகைக்கு

இல - 24, பலாலி வீதி, 2ம் ஒழுங்கையில் அரச OR தனியார் நிறுவனத்தில் பணி புரிபவர்களுக்கு மட்டும் அறை வாடகைக்கு உண்டு.
(ஆண்கள்)

(5120)

**077 996 8835**
**077 236 5351**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்!

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன என்பதை ஏற்கிறோம். தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம். ஐக்கிய நாடுகள் சபை எங்களின் சர்வதேச நண்பன். அதன் உதவிகள் எங்களுக்கு எப்போதும் தேவையானது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு செவிமடுப்பதில்லை என்பது தவறான கருத்தாகும். தேசிய மக்கள் சக்தி அவ்வாறு நடந்துகொள்வதில்லை. நாங்கள் இனங்கள், பாலினங்கள் என எது தொடர்பிலும் பார்ப்பதில்லை.

வடக்கு மக்கள் தொடர்பிலும் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். ஆனால் வடக்கு அரசியல்வாதிகள் அச்சமடைவது ஏன் என்று தெரியவில்லை.

வடக்கு, கிழக்கு தென் பகுதி மக்களின் சகல பிரச்சினைகளையும் உடனே எங்களால் தீர்க்க முடியாது. ஆனால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றோம். எங்களை தூற்றக் கூடாது. எங்களுக்கு நான்கு வருடங்கள் உள்ளன. நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

மனிதர்களின் மனங்களிலேயே யுத்தம் ஆரம்பிக்கின்றது. மனிதர்களின் மனப்பான்மையிலேயே முறுகல்கள் ஏற்படுகின்றன. இதனால் சமாதானமும் அந்த மக்களின் மனங்களில் இருந்தே வர வேண்டும். மீண்டும் நாடு பாதாளத்திற்குள் தள்ளப்படக் கூடாது. நாங்கள் சில முன்னேற்றங்களை கண்டுள்ளோம்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பில் அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ச குலரத்ன தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. அதன் இறுதி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். சர்வதேச ரீதியில் பயங்கரவாத வரைவிலக்கணத்துடன் உள்ளடங்கலாக அதனை மாற்றியமைக்கவுள்ளோம்.

இதேவேளை நீண்டகால சிறைக்கைதிகள் உள்ளனர். இதுவொரு பிரச்சினை என்று தெரியும். இதனால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக சிறையில் வாழ்பவர்கள் தொடர்பில் இந்த குழு ஆராயும். இது தொடர்பான அறிக்கையை அமைச்சரவையில் சமர்பிக்கவுள்ளோம்.

எவ்வாறாயினும் இனவாத அரசியலை நாங்கள் வெறுக்கின்றோம். எந்த சமூகத்திற்கும் பாதிப்பில்லாதவாறே எந்தவித திருத்தங்களையும் மேற்கொள்கின்றோம். அடுத்த வருடங்களில் குறிப்பிட்ட மாற்றங்களை காணலாம்.

இதேவேளை நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கரிசனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். முன்னை அரசாங்கங்கள் அதனை செய்யாமல் விட்டுச் சென்றுள்ளன. நாங்கள் அதனை நிறைவேற்றுவோம்.

ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் சிலர் விமர்சனங்களை செய்கின்றனர். ஆனால் இது நீதித்துறையின் சுதந்திரத்தையே காட்டுகின்றது. நீதித்துறையில் நாங்கள் தலையிடுவதில்லை. சட்டம் அதனை செய்யும். இதில் சமூக அந்தஸ்து தொடர்பில் எதுவும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. நடுநிலையாக சுதந்திரமாக நீதித்துறை செயற்படும்.

ஐ.நா எங்களின் சர்வதேச நண்பனே. அதன் உதவிகள் எங்களுக்கு தேவை. அதன்படி செயற்படுவோம். பல தசாப்தங்களாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளன. அது தொடர்பில் உரிய பங்களிப்பை வழங்கும் என்று நினைக்கின்றோம். அத்துடன் ஐ.நாவுக்கு மட்டுமன்றி மக்களுக்கு எது சரியோ அதனையே நாங்கள் செய்வோம்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் உள்ளன என்பதை நாங்கள் மறுக்கவில்லை. தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்கு வழங்கிய சகல வாக்குறுதிகளையும் நாங்கள் பதவி காலத்துக்குள் நிறைவேற்றுவோம் என அவர் தெரிவித்தார். (நி)

## சர்வதேச ஊடகங்களில் பேசுபொருளாகிய ரணிலின் கைது



(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை சர்வதேச ஊடகங்களில் முக்கிய செய்தியாக பிரசுரமாகியுள்ளது.

இந்திய, அவுஸ்திரேலிய, ஆபிரிக்க, ஐரோப்பிய அமெரிக்க மத்திய கிழக்கு ஊடகங்களில் இந்த செய்தி முக்கிய செய்தியாக பிரசுரமாகியுள்ளது.

அரச நிதியை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டுக்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தலைப்பில் இந்த செய்திகள் வெளியாகியுள்ளன.

ரணில் விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நசீட் குறிப்பிட்டிருந்தார். (நி)

## அர்ஜுன மகேந்திரனுக்கு மீண்டும் அழைப்பாணை உத்தரவு



(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு நீதிமன்றினால் மீண்டும் அழைப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தனது மருமகனின் நிறுவனத்துக்கு மத்திய வங்கியின் பிணைமுறி பத்திரங்களை வழங்கி, அரசாங்கத்துக்கு 10 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில் இந்த அழைப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க அழைப்பாணை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் மற்றும் இலஞ்சச் சட்டத்தின் 70 ஆவது பிரிவின் கீழ் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்த முறைப்பாட்டை ஆராய்ந்த பின்னர், குறித்த அழைப்பாணை உத்தரவினை ஆங்கில மொழியில் வெளியிடவும் நீதவான் உத்தரவிட்டார்.

சிங்கப்பூரில் வசிப்பதாகக் கூறப்படும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு 2024 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு ஏற்கனவே அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

எனினும் அந்த அழைப்பாணையின் பிரகாரம் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என இலஞ்ச ஊழல் தடுப்பு விசாரணை ஆணைக்குழு மேலதிக அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து மீண்டும் அழைப்பாணை உத்தரவு வெளியிடப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்மராட்சி வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் 21 வயதிற்கு உட்பட்ட தென்மராட்சி ரீதியான லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கைதடி குமரநகர் அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி அணி மோதியது. இதன்போது கைதடி குமரநகர் அணி 7:3 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

# மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் மகாஜன கல்லூரிக்கு 5 தங்கம்



வட மாகாண பாடசாலைகளுக்கிடையே துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்று நிறைவடைந்த தடகளப் போட்டியில் யா/ மகாஜனக் கல்லூரி வீரர்கள் 5 தங்கம், 6 வெள்ளி மற்றும் 3 வெண்கலம் என்பன பெற்று சாதனை படைத்துள்ளனர்.

14 வயதுப் பிரிவினருக்கான 60 மீற்றர் ஓட்ட நிகழ்வில் கெவின் லீதன் முதலாமிடத்தையும், 100 மீற்றர் ஓட்டப் போட்டி மற்றும் உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளில் முறையே முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை எஸ். பிரவீன் பெற்றுக் கொண்டதோடு சிறந்த சுவட்டு வீரனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

16 வயதுப் பெண்கள் பிரிவினருக்கான 100 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் ரி. ஆரதி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் 18 வயது ஆண்கள் பிரிவினருக்கான தட்டெறிதலில் கவியழகன் இரண்டாமிடத்தையும் பெண்களுக்கான தட்டெறிதலில் வை. உமாசங்கவி முதலாமிடத்தையும் பெற்றனர்.

20 வயது ஆண்கள் பிரிவினருக்கான உயரம் மற்றும் கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் சி. துசாந்தன் இரண்டாமிடத்தையும் ஜெ. ஜெனுசின் குண்டெறிதலில் இரண்டாமிடத்தையும் தட்டெறிதலில் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டதோடு பெண்கள் பிரிவில் பி. லக்சனா 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் 49 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வெற்றியீட்டியவர்களைக் கௌரவிக்கின்ற நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

(படம்- யதுபாஸ்கரன்)

## சர்வதேச...

உள்ளன.

இந்நிலையில், அநுர அரசாங்கத்திற்கு ராஜதந்திர ரீதியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடும் இழுபறிக்கு மத்தியில் நேற்று முன்தினம் இரவு விளக்கமறியல் அறிவிக்கப்பட்டு ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

எனினும் நேற்று உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு ரணில் மாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன் வீட்டில் இருந்து உணவு பெற்றுக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது.

இதன் பின்னணியில் மேற்குலக நாடுகளின் கடும் அழுத்தம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் உயர்மட்ட தரப்புக்களில் இருந்தும் ரணிலின் கைது குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட பல மேற்குலக நாடுகளுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்ட இலங்கை ஜனாதிபதிகளில் ஒருவராக ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார்.

இந்நிலையில், வெளிநாட்டுப் பயணம் ஒன்றை காரணம் காட்டி, அவரை சிறையில் வைக்க முயற்சிப்பது அபத்தம் என ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவொரு தவறான செயற்பாடு என சாடியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்திய உயர்மட்ட அதிகாரிகளுடன் தொலைபேசி உரையாடல்களை மேற்கொண்டதாகவும் அரசியல்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## ஜனநாயகத்தின்...

தாக்குதல் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுக் காலை சிறைச்சாலையில் பார்த்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், குறித்த கைது நடவடிக்கை தொடர்பில் முன்கூட்டியே சமூக ஊடகச் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்திருந்த கருத்தைச் சுட்டிக்காட்டினார்.

இது மிகவும் மோசமான நிலைமையாகும்.

அதனடிப்படையில் குறித்த கைது நடவடிக்கையின் பின்னணியில் பாரிய திட்டம் உள்ளமை தெரியவருகின்றது.

இது நீதிமன்றத்தையும் நாட்டின் சட்டத்தையும் அவமதிக்கும் செயற்பாடாகும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## ரணிலின்...

இதில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகத் தொடர்ந்து குரல் கொடுப்பது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அதுகோரல, பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, மனோ கணேசன், பி.திகாம்பரம், ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் ருவான் விஜேவர்தன, அகில விராஜ் காரியவசம், வஜிர அபேவர்தன, சகல ரத்நாயக்க, சுகீஸ்வர பண்டார மற்றும் பல எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரும் இதை ஆதரிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று நடைபெறும் ஊடக சந்திப்பில் அவர்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என்றாலும், முன்னாள் ஜனாதிபதிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாட்டில் இருப்பதாகவும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கலந்து கொள்ளப் போவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# சம்பியனானது இத்தாலி ஜோடி



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடைபெற்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் நடந்த இறுதிப் போட்டியில் போலந்தின் இகா ஸ்வியாடெக்-நார்வேயின் காஸ்பர் ரூட் ஜோடி, இத்தாலியின் சாரா எர்ரானி-ஆண்ட்ரியா வவசோரி ஜோடி உடன் மோதியது.

இதில் சிறப்பாக ஆடிய இத்தாலி ஜோடி முதல் செட்டை 6-3 என வென்றது. 2 ஆவது செட்டை இகா ஸ்வியாடெக் ஜோடி 7-5 என வென்றது.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3 ஆவது செட்டை 10-6 என வென்று சம்பியன் பட்டம் கைப்பற்றி அசத்தியது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவிக்கு நாளை மஹோற்சவம் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள் ளன.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.20 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளதென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

# வழிகாட்டல் கருத்தமர்வு

(சாவகச்சேரி)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம், கொரியன் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை கடல்வள பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து அண்மையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களுக்கு வழிகாட்டுதல் கருத்தமர்வினை முன்னெடுத்திருந்தனர்.

பேராசிரியர் சன்ஜோம் லிம்மினால் நடத்தப்பட்ட மேற்படி கருத்தமர்வில் மாணவர்களுக்கு இலங்கை கடல்சார் அறிவியலின் முக்கியத்துவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.(8-30)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(0461)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு

077 839 3974, 076 889 1308



இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ். வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத் தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்

தொடர்புகளுக்கு : 076 682 7368

No.139, Main Street, Jaffna

யாழ். நீதிமன்றத்துக்கு அருகாமையில்

(முன்பதிவு செய்து வரவும்) (5073)


# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் வழங்கும் சிறப்பு நிகழ்ச்சிகளான குழுஇசை, கருவியிசை, நடனம் போன்றன இடம்பெறவுள்ளன. (3)


*Lions International District 306 D12*

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் கார்னிவல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அத்துடன் லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் **கார்னிவல்** 20.08.2025 தொடக்கம் 24.08.2025 திகதியும் அதனைத் தொடர்ந்து வரும் நாட்களிலும் நடைபெறும். அனைவரது வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது. மாலை 3 மணி தொடக்கம் இரவு 12 மணிவரை நல்லூர், சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.




லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு : (Lions Eye Hospital Financial Contributors to Contact)

லயன். Dr K.M.பத்மநாதன் (லயன்ஸ் மாவட்ட ஆளுநர் 306 D12)

077 732 3702

district306d12@gmail.com

We Serve With Humanity (5100)



# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>10 இல் சூரி செவ்<br>கி.பா: 21<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: IT, London<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15939 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 36 ½<br>7 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bsc,MSc,Nurse<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15964 |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 6"2"<br>தகைமை/தொழில்: IT, Director(pvt)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/15940 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>7 இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/15965 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 17 1/4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:AL, busniess<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15943 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDE, Teacher<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/15966 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>4 இல் சூரி செவ்<br>கி.பா: 9 1/2<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: O/L, கடை,Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15946 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில் : A/L, Beautician<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15969 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: HND Public Health, Inspector<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ:B/15947 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா: 57<br>2 இல் சூரி செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bank(London)<br>எதிர்பார்ப்பு: Only UK<br>தொ.இ: G/15972 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது.

### கிளிநொச்சி பொது வைத்தியசாலையில்

# பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவு இயங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்

### நோயாளர் நலன்புரிச் சங்கம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் சுமார் ஐயாயிரத்து 300 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பெண் நோயியல் வைத்திய சிகிச்சை பிரிவினை உடனடியாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நோயாளர் நலன்புரி சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் மேற்கொண்ட ஊடக சந்திப்பிலேயே மேற்படி கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நெதர்லாந்து அரசினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் சகல வசதிகளையும் கொண்ட 160 இற்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கான படுக்கை வசதிகளை கொண்ட பெண் நோயியல் வைத்திய சாலை திறந்து வைக்கப்பட்டு இன்றுவரை இயங்காத நிலையில் காணப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த வைத்தியசாலையில் உள்ள சில வைத்திய உபகரணங்களை வேறு வைத்திய சாலைகளுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் திரை மறைவில் மேற்கொள்ளப்படுவதாகவும் இது தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டுவருகின்றன.

இது தொடர்பாக சுகாதார உயர் மட்டங்களிலும் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான தேவை கருதி நவீன வசதிகளுடன் கூடிய இந்த பெண் நோயியல் வைத்தியசாலையை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நோயாளர் நலன்புரி சங்கத்தின் தலைவர் க.விஜயசேகரன் ஊடக சந்திப்பை மேற்கொண்டு இருந்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் வைத்தியசாலையிலுள்ள பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இங்கிருந்து மருத்துவ உபகரணங்களை மாற்றுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை என்றும் அதற்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (8-316)

# ‘சிறுவர்களைப் பாதுகாப்போம்’ விழிப்புணர்வு நடைபவனி



(நெளுக்குளம்)

சிறுவர் உரிமைகளை பாதுகாக்க கோரி விழிப்புணர்வு நடைபவனியானது ஜீவநகர் கிராமத்தில் பொது நோக்கு மண்டபத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு நாம் சிறுவர் எம்மை காப்பீர் எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு பேரணியினை முத்தையன்கட்டு குளம் கிராம சேவையாளர் பவிதா ஆரம்பித்து வைத்திருந்தார்.

முத்தையன்கட்டு ஜீவநகர் பொதுநோக்கு மண்டபத்திற்கு முன்பாக ஆரம்பித்த குறித்த பேரணியானது நடைபவனியாக சென்று ஜீவநகர் சமாதான சுவிஷேச தேவாலயத்தில் நிறைவு பெற்றிருந்தது. ஜெபஆலய மிஷன் திருச்சபையின் கீழ் இயங்கும் பெத்தேல் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றிருந்தது.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை கொடு, சிறுவர்களை பாதுகாப்போம் , சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதே, வன்முறைகளில் இருந்து சிறுவர்களை நாம் பாதுகாப்போம் போன்ற பல்வேறு பதாதைகள் தாங்கிய விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றிருந்தது .

குறித்த பேரணியில் பெத்தேல் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குனர் காலேப் மற்றும் உத்தியோகத்தர்கள், சிறுவர்கள் கலந்து கொண்டனர். (8-299)

# வடக்கு மாகாண இளையோருக்கு தாய்லாந்தில் வேலை வாய்ப்பு!

### தூதுவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் பெய்ரூன் தலைமையிலான குழுவினர், ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலில், பொருட்களை பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதில் தாய்லாந்து முன்னணியில் உள்ளமையை சுட்டிக்காட்டிய ஆளுநர் மிக நீண்டகால அனுபவம் உள்ள தாய்லாந்து இது தொடர்பில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

வடக்கு மாகாணம் விவசாய மற்றும் கடலுணவு உற்பத்திகளில் போதிய திறனைக் கொண்டுள்ளபோதும் இரு துறைகளில் விலைத்தளம்பல் இருக்கின்றது என்று ஆளுநர் குறிப்பிட்டார். இதனால் விவசாயிகள் விவசாயத்தை கைவிடும் நிலைமையும் இருக்கின்றது என்றும் தெரிவித்தார். இதை மாற்றியமைப்பதற்கு உற்பத்திப் பொருட்கள் அதிகளவில் கிடைக்கப் பெறும்போது அதை பதப்படுத்துவதற்கோ அல்லது பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கோ உரிய வாய்ப்புக்கள் இல்லை என்பதை ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயத்தில் அனுபவமுள்ள தாய்லாந்து முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்வதன் ஊடாக பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்ய முடியும் என ஆளுநர் குறிப்பிட்டார். இந்த விடயத்தை சாதகமாக அணுகுவதாக தூதுவர் பதிலளித்தார். அத்துடன் வேலை வாய்ப்பு தொடர்பான விடயத்தில், தாய்லாந்தில் பல இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதையும் குறிப்பிட்ட தூதுவர் வடக்கு மாகாண இளையோரும் அந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், சுற்றுலாத்துறை தொடர்பிலும் தாய்லாந்து தூதுவர் கவனம் செலுத்தினார். அதற்கான உட்கட்டுமானங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

வடக்கு மாகாணத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளமையை சுட்டிக்காட்டிய ஆளுநர், கடந்த கால போர் காரணமாக அந்த மாவட்டம் மேலெழுந்து வருவதில் இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டார். போதுமான வளங்கள் அந்த மாவட்டத்திலுள்ள போதும் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமையும் தெளிவுபடுத்தினார். இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளரும் கலந்து கொண்டனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 507
24.08.2025


# இலங்கை வரலாற்றைப் புரட்டிப் போட்ட ரணிலின் கைது

அபிமன்யு



ரணில் விக்கிரமசிங்க. இந்தப் பெயர் இலங்கை வரலாற்றை மாற்றியமைத்த பெயர் என்றே கூறிவிடலாம். ஆம். அரசியலின் அத்தனை நுணுக்கங்களையும் அறிந்தவர் ஆதலால் அவரை அரசியல் நரி என்று அழைப்பதுமுண்டு. அந்தளவிற்கு அரசியலில் ஞானம் கொண்டவர்.

உலக அரசியல் தலைவர்களை அணுகும் நுட்பம் தெரிந்தவர். ஆதலால் தான் உலக நாடுகளின் தலைவர்கள் பலர் முரண்பட்டிருந்த நேரத்தில் அவர்கள் அனைவரிடத்தேயும் சமமான உறவைப் பேணியவர் ரணில் விக்கிரமசிங்க.

இலங்கை மிக இக்கட்டான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த வேளை, நாட்டின் தலைவர்கள் எவரும் நாட்டைப் பொறுப்பேற்க அச்சமுற்ற வேளை, நாட்டைப் பொறுப்பேற்று ஓரளவுக்கு அந்த நெருக்கடியைத் தீர்த்து வைத்தவர்.

இவ்வாறு பலர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நற்சான்றுப்பத்திரம் வழங்கியிருந்தனராயினும், ஊழல் குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டிருப்பது நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தனது மனைவியான பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள பிரிட்டன் செல்வதற்கு 17 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதியை அரச நிதியிலிருந்து செலவு செய்திருக்கிறார். இதுவே ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்யக் காரணம்.

நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட அவர் நீண்டநேர விசாரணைக்குப் பின் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். இரவு 10 மணிவரை வழக்கு விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் அவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கையில் விலங்கிடப்பட்ட ரணில்

ரணில் விக்கிரமசிங்கவிற்கு 26ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவை அடுத்து அவர் கைவிலங்கிடப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

## நீதிமன்றை முற்றுகையிட்ட ரணில் ஆதரவாளர்கள்

ரணில் விக்கிரமசிங்கவை வெலிக்கடைச் சிறைக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமான போது கோட்டை நீதிமன்றை முற்றுகையிட்ட ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவை அழைத்துச் சென்ற வாகனத்தை முற்றுகையிட்ட ஆதரவாளர்கள் வாகனத்தை நகரவிடாது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டதையடுத்து நிலைமை சுமூகத்திற்கு வந்தது.

## திட்டமிட்ட கைதா?

ரணில் விக்கிரமசிங்கவின் கைது நடவடிக்கை திட்டமிட்ட செயலா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அதாவது "ரணில் விக்கிரமசிங்க நாளை (22.08.2025) அன்று கைது செய்யப்படுவார். அவ்வாறு கைது செய்யப்படவில்லை எனின் நான் எனது யூரியூப் தளத்தை மூடிவிடுகிறேன்" என யூரியூப் தளத்தை நடத்தும் ஒருவர் கூறியிருப்பது ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

## சட்டம் அனைவருக்கும் சமம்

ரணிலின் கைதை அடுத்து சட்டம் என்பது, பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதிகள், பொது மக்கள் என்ற பேதம் பாராது.

அது அனைவருக்கும் சமமானது யார் தவறு செய்தாலும் சட்டம் அவர்களைத் தண்டித்தே தீரும் என பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்திருந்தார்.

## ஒத்திகைக் கைதா?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில் இதைவிட மோசமான ஊழல் புரிந்தவர்கள் பலர் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களை ஏன் இன்னும் கைது செய்யவில்லை என்று ஆய்வாளர்கள் சிலர் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் கைது நாட்டைச் சூறையாடியவர்களை கைது செய்வதற்கான ஒத்திகைக் கைது என வேறு சில ஆய்வாளர்கள் பதில் வழங்கியுள்ளனர்.

## சொன்னதைச் செய்யும் அரசு

அநுரகுமார திஸாநாயக்காவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த தேர்தல் வாக்குறுதியில் மிக முக்கியமானது ஊழல் ஒழிப்பு.

அத்துடன் நாட்டை சூறையாடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்படுவார்கள் எனத் தெரிவித்திருந்தது.

ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு வாக்களித்திருக்கின்றனர்.

எனவே இவ்வாறான ஊழல்வாதிகளுக்கு எதிரான கைதுகள் ஒருநாளும் நாட்டையும் நாட்டு மக்களையும் குழப்பாது என அரச தரப்பு விளக்கியுள்ளது.

## தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன?

தேசிய மக்கள் சக்தி அரசிற்கு தமிழ் மக்களின் கணிசமான ஆதரவு கிடைத்திருந்த போதிலும் வடகிழக்கில் தமிழ் தேசியக் கட்சிகள் முன்னிலை பெற்றிருந்தன. தெற்கு அரசில் ஊழல்வாதிகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் பூரண ஆதரவை வழங்குவார்கள்.

அத்துடன் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த போர்க்குற்ற மீறல்களுக்கும் இந்த அரசு நீதியான விசாரணைகளை முடுக்கிவிட வேண்டும் என்று கோருகின்றனர்.

## ஏமாந்த தமிழினம்

காலம் காலமாக வந்த ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கான தீர்வைத் தருகிறோம் என வெறும் வெற்று வார்த்தைகளைக் கூறினரே தவிர ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அவர்களின் நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்து வந்தன.

இதில் ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் விதிவிலக்கானவர் அல்ல. ஆம், தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கும் பொன்னான சந்தர்ப்பங்களை தட்டிக் கழித்து அந்தத் தீர்வுகளை எதற்கும் உதவாத செல்லாக் காசாக்கிய பெருமை ரணில் விக்கிரமசிங்கவையும் சாரும்.

ஊழல் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படுவார்கள் என்பதை; முன்னாள் ஜனாதிபதி என்ற எந்தச் சிறப்புரிமையையும் வழங்காமல் ரணில் விக்கிரமசிங்க கைகளில் விலங்கிட்டு அழைத்துச் சென்ற செயல் நிரூபித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற,அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். நல்லூர்க் கந்தசுவாமியாரின் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடந்தேறியுள்ளது.

இதில் பொலிஸாரின் சேவை உண்மையிலேயே பாராட்டப்பட வேணும்.

முன்னைய காலங்களை விட, இம்முறை பொலிஸார் களத்தில நின்று தங்களின் கடமையைச் சிறப்பாகச் செய்துள்ளனர்.

அதிலும் வழமையில நல்லூர் சிவன் புதுவீதியானது வாகன நெருசலில திக்குமுக்காடுவது வழக்கம்.

ஆனால் இம்முறை மூன்று பொலிஸார் அந்த வீதியில நின்று வாகனங்களை ஒழுங்குபடுத்தியதன் காரணமாகப் போக்குவரத்து நெருக்கடி அறவே தவிர்க்கப்பட்டது.

**விதானையார்:-** பண்டிதர் சொல்லுறது உண்மை தான். நல்லூர் சிவன் புதுவீதியில ஏற்படக் கூடிய வாகன நெருக்கடி குறித்து ஆலடியில நாங்கள் பிரஸ்தாபித்திருந்தம்.

அந்த வகையில, இந்த முறை சிவன் புது வீதியில பொலிஸார் கடமையில இருந்து நிலைமையைச் சுமுகமாக்கினார்கள்.

அதேபோல மாநகர சபைப் பணியாளர்களும் துப்பரவுப் பணியிலும் மேற் பார்வையிலும் மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருந்தினம்.

**கங்காணி:-** உண்மை தான். எங்கட சனங்கள் தண்ணிப் போத்தல்களையும் பொலித்தீன் பைகளையும் நல்லூர்க் கந்தனின் வீதியில போட்டுவிட்டுப் போக, அவை முழுவதையும் எங்கட மாநகர சபை சுத்திகரிப்புப் பணியாளர்கள் கூட்டித் துப்பரவு செய்யிற தென்பது எவ்வளவு கடினமான காரியம்.

இருந்தும் அவர்கள் அதைச் செம்மையாகச் செய்து முடித்துள்ளனர்.

இனிமேலாவது அதுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில குப்பைகளைப் போட்டு, சுத்திகரிப்புப் பணியாளர்களும் எங்களைப் போன்ற மனிதர்கள் என்பதை உணர்ந்து மனிதநேயத்துடன் நடந்து கொள்ளுவோம் எனக் கங்காணி கூற, ஆலடி அமைதியாகியது.

வாத்தியார் வைத்திலிங்கம் அமைதியை ஊடறுத்தார்.


**வாத்தியார்:-** நல்லூர்க் கந்தனின்ர மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது மட்டுமல்ல,இந்தியாவில இருந்து பக்தர்கள் பலர் நல்லூர்க் கந்தனின் மகோற்சவத்திற்கு வந்திருந்தது தான் மிகப் பெரிய விடயம்.

**பண்டிதர்:-** வாத்தியார் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலையும் நல்லூர்க் கந்தசுவாமியார் கோயிலுக்கு வந்து வழிபட்ட பின்னர், அவர்கள் இந்தியாவிற்குப் போய் நல்லூர்க் கந்தசுவாமியாரின் ஆலயத்தைப் பற்றிக் கூறியவை இந்திய மக்களை ஈர்த்திருந்தன.

அதோட ஆலய நிர்வாகம் எண்டால் அது நல்லூர்க் கந்தனின் ஆலய நிர்வாகம் தான்.

அந்த நிர்வாகத்தைப் போல தமிழகத்து ஆலயங்களும் நிர்வாகம் செய்ய வேணும் எனக் கூறியிருந்தனர்.

அவ்வளவு தான், இனி இந்திய தேசத்து மக்கள் நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கப் படை எடுப்பினம். இது நிச்சயம் நடக்கும்.



## நல்லூர்க் கந்தனின் திருவிழாவில் இந்திய மக்கள் பலர் பங்கேற்பு

**விதானையார்:-** இந்த இடத்தில தான் நல்லூர் எஜமான் அவர்கள் பயிற்சி அளிக்கப்பட்ட முதற்தரத் தொண்டர் குழாமை உருவாக்கி, அவர்கள் மூலம் நல்லூருக்கு வருகின்ற அடியார்களைக் கையாளுகின்ற ஏற்பாட்டைச் செய்ய வேணும்.

**மூப்பர்:-** என்ன விதானையார் சொல்லுறியள். இப்ப சிவப்புச் சால்வை கட்டின தொண்டர்கள் இருக்கினம் தானே. பிறகேன் முதற்தர தொண்டர், இரண்டாம் தர தொண்டர் எனப் பிரிப்பான்.

**விதானையார்:-** இஞ்சே மூப்பர்; நல்லூர் எஜமான், நம்பிக்கையின் அடிப்படையில- எல்லோரும் முருகனின்ர மீளா அடியவர்கள் என்ற நினைப்பில தொண்டர் சேனையை உருவாக்கி இருக்கிறார். இது ஒரு நல்ல நோக்கில செய்யப்பட்டது.

ஆனாலும் சில தொண்டர்கள் அடியவர்களுடன் பண்பாக நடப்பதில்லை. சில வேளைகளில சண்டித்தனப் பாங்கில நடக்கினம். ஆகையால தான் ஒரு குறிப்பிட்ட தொண்டர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சரியான பயிற்சிகளை வழங்கி அடியவர்களுடன் எப்படி அணுகுவது என்பதைச் சொல்லிக் கொடுத்து அவர்களை முதற்தரத் தொண்டர்களாக நிறுத்த வேணும்.

தேவையேற்படின் அவர்களுக்கான சால்வையின்ர நிறத்தை மாற்றியமைக்கலாம்.

சிவப்புச் சால்வை அணிந்த ஏனைய தொண்டர்கள் சரியை எனும் சரீரத் தொண்டு செய்கின்றவர்களாக செயற்படுவது சாலச் சிறந்ததாக இருக்கும்.இவ்வாறு விதானையார் கூற,ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அநுரவின்ர அரசாங்கமும் தன்ர ஆட்டத்தைத் தொடங்கிற்றுது போல,

**சிறாப்பர்:-** அதெண்டால் உண்மைதான். அரச பணத்தில சொந்தத் தேவைக்காக வெளிநாடு சென்ற குற்றச்சாட்டில தான் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ளார் எனும் போது, அரசாங்கச் சொத்துக்களைச் சூறையாடியவர்களுக்கான தண்டனை என்னவாக இருக்கும் எண்டு தான் யோசிக்கிறன்.

**பண்டிதர்:-** இனி தென்னிலங்கையில **கைதுப் படலம்** நடக்கப் போகுது. இதில எங்கட ஆட்கள் அமைதியாக இருக்க வேணும். தேவையில்லாமல் கதைத்து நல்ல சந்தர்ப்பங்களை நாசம் செய்து விடக் கூடாது. இவ்வாறு பண்டிதர் கூறியதும் ஆலடி மீண்டும் மௌனமாகியது.

**கங்காணி:-** அது சரி சிறாப்பர், பரிசு விழுந்திருப்பதாகத் தொலைபேசியில இருந்து வந்த அழைப்பை நம்பி, வங்கிக் கணக்கிலக்கத்தையும் பின்னர் ஓ.ரி.பி (O.T.P) நம்பரையும் நீங்கள் கொடுத்து வங்கியில கிடந்த காசை இழந்ததாக அறிந்தன் உண்மை தானோ.

ஓ! உந்த நாசமறுப்பாரின்ர வேலை, ஒரு லட்சம் ரூபா பரிசு விழுந்திருப்பதாகக் கூறி என்னை ஏமாற்றிப் போட்டார்கள். நானும் எல்லாத்தையும் நம்பி இலக்கங்களைக் கொடுத்தன். அவ்வளவு தான் என்ர வங்கிக் கணக்கில இருந்த மூன்று இலட்சம் ரூபாவை மூன்று நிமிடத்தில சூறயாடிப் போட்டாங்கள்.

**வாத்தியார்:-** எத்தனை தடவை எச்சரிக்கை செய்தாலும் எங்கட சனங்கள் திருந்திற மாதிரி இல்லை.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரணிலின் கைது தொடர்பில் வியாசர் என்ன நினைக்கீறிர்?



# வியாசர் பதில்கள்



நடிகர் விஜயின் மதுரை மாநாடு பற்றிக் கூற முடியுமா? விஜய் தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஆவாரா வியாசரே?

### எங்கும் கலப்படம் எதிலும் கலப்படம் என்றால் எதை நம்புவது?

மகாலட்சுமி-கொக்குவில்

நஞ்சு என்று தெரிந்தும் அதை விரும்பி உண்ணுவதற்கு ஆள் இருந்தால் நஞ்சு தானே உண்ணும் உணவாகும்.

என்றைக்கு புறோயிலர் கோழிகள் எம் சமூகத்தின் உணவுப் பொருளானதோ அன்றைக்கே கலப்படம் விஸ்வரூபம் எடுத்து விட்டது.

இனி நாம் எவ்வளவு தான் குத்தி முறிந் தாலும் அதை மாற்ற முடியாது.

### வியாசருக்கு 60 ஆம் கல்யாணம் முடிந்து விட்டதாமே. உண்மையா??

ரிதுஷ்-மந்துவில்

ஒருவனுக்கு 60 வயது வருவதென்பது ஓய்வுக்காலம் என்ற நிம்மதியைத் தரும்.

இந்த நேரத்தில் போய் 60 ஆம் கல்யாணம் என்று பழையதெல்லாவற்றையும் நினைவுபடுத்தினால் அவனால் அந்த ஓய்வுக்காலத்தை நிம்மதியாக அனுமதிக்க முடியுமா சொல்லுங்கள்?

திருமணம் என்ற விபத்தில் தெரியாத் தனமாகச் சிக்கியவனை மீண்டும் அதே விபத்தை நினைவுபடுத்துவது எவ்வளவு கொடுமையானது தெரியுமா?

### நடிகர் விஜயின் மதுரை மாநாடு பற்றிக் கூற முடியுமா? விஜய் தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஆவாரா வியாசரே?

விஜய் ரசிகன்-யாழ்ப்பாணம்

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநாடு மதுரையில் மிகப்பிரமாண்டமாக நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள், தொண்டர்கள் மத்தியில் விஜயின் உரை பட்டாசைப் போல வெடித்தது.

தமிழக முதல்வர் ஸ்ராலினை அங்கிள் என விழித்ததும், மோடி அரசை நேரடியாக எதிர்த்ததும், சீமான், கமலை மறைமுகமாக சீண்டியதும் விஜயின் அரசியல் பிரவேசத்தையும் அவரின் வெற்றி வாய்ப்பையும் இன்னும் திடப்படுத்தியது என்றே கூற வேண்டும்.

மறைந்த கப்டன் விஜயகாந்தை அண்ணன் என்று கூறியது இன்னும் நெஞ்சை நெருடுவதாய் அமைந்திருந்தது.

2026 தமிழக வெற்றிக் கழகத்தின் ஆட்சியே அரியணையேறும். நான் உங்கள் விஜய், உங்கள் வீட்டு விஜய் என்று விஜய் கூற அரங்கம் அதிர்ந்தது.

### ஐ.நா இந்த அரசையும் குற்றம் சாட்டுகிறதே வியாசரே?

சிவம்-வதிரி

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்ற மீறல்களை மறுப்பதில் இந்த அரசும் கவனம் செலுத்துகிறது.

எனின் முன்னைய கொழுக்கட்டைகள் இப்போதைய மோதகங்கள் என்று கூறி னால் மிகையாகாது.

இதில் கொடுமை என்னவெனின் பாதிக்கப்பட்ட தமிழினம் இன்னும் இந்த அரசு எமக்கான தீர்வைத் தரும் என நம்பிக் கொண்டிருக்கிறது.

ஊழல் செய்வது, அரச சொத்தை தவறாகப் பயன்படுத்தியது, சட்டத்தை தமக்கு ஏற்றாற் போல் மாற்றியது போன்ற குற்றங்களை விட ஒரு இனத்தை அழித்த குற்றம் மிகப் பெரிய தல்லவா?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்

### இன்றைய கால கட்டத்தில் எது முக்கியமானது வியாசரே?

குமார்-யாழ்ப்பாணம்

இப்போது உடல் ஆரோக்கியத்தை கவனிப்பதற்கு ஆள் இல்லை. மனிதன் எதை உண்ண வேண்டும். எதை உண்ணக் கூடாது என்ற பொது அறிவு இல்லாமல் கண்டதையெல்லாம் உண்டு உடல்பருத்து பிரசர், கொலஸ்ரோல் என்று வைத்தியசாலையில் வரிசையில் நிற்கின்றான்.

உணவே மருந்து. உணவு மருந்து. உணவை மருந்தாய் எடுத்துக் கொண்டால் உடல் ஆரோக்கியமாகும். நாமும் நூறு வருடங்கள் வாழலாம். மனித ஆரோக்கியமே இன்றைய முக்கிய விடயம்.

### நல்லூர் பக்கம் போனீர்களா வியாசரே?

இந்துமா-யாழ்ப்பாணம்

நல்லூரான் திருவடியை நாடுவோர்க்கு அவன் நாளும் அருள்வான் என்பதற்கு திருவிழாக் காலத்தில் அங்கு வந்திருந்த நிறுவனங்களே தக்க சாட்சி.

இதில் ஒரு பிரபல நிறுவனம் தனது நிறுவனத்தை 25 நாட்களும் நடத்த நில வாடகையாக நான்கு இலட்சம் வழங்கியது என்பதை அறிந்த போது முருகனின் திருவிளையாடல் புரிந்தது.

கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடியில் அன்பர் இளநீர் தானம் வழங்கியமை என்னை கவர்ந்து விட்டது.

காலை முதல் மாலை வரை வருபவர்களுக்கெல்லாம் இளநீர் வழங்கப்பட்டது. இந்தக்காலத்தில் ஒரு இளநீர் 200 முதல் 300 வரை விற்கப்படுகிறது. அவ்வாறெனின் அந்த தனவந்தரின் மனம் நிச்சயம் கொடைக்குரியதே. வாழ்த்துக்கள் உங்கள் சேவை இன்னும் தொடர வேண்டும்.

### வியாசரே நீங்கள் தாய் பக்கமா? தாரத்தின் பக்கமா?

தாசன்-புலோப்பளை

சத்தியாமாகச் சொல்கிறேன் நான் இரண்டு பக்கமும் இல்லை.

மருமகளும் மாமியாரும் சண்டையிடும் போது தாய்பக்கமும் நிற்காமல் தாரத்தின் பக்கமும் நிற்காமல் பீரோவின் பக்கம் நிற்பவனே நல்ல கணவன்.

அந்தவகையில் நான் நல்ல கணவன் என்று நினைக்கிறேன்.

சொந்த அனுபவம் கிடையாது. சமூக வலைத்தளத்தில் படித்து ரசித்தது.

### ரணிலின் கைது தொடர்பில் வியாசர் என்ன நினைக்கீறிர்?

சந்திரன்-மாதகல்

இலங்கை வரலாற்றில் ஜனாதிபதியாக இருந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறை.

அரச சொத்தை தனது தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தினார் என்பதனாலேயே ரணில் மீது சட்டம் பாய்ந்தது.

அட இதற்கே கைது எனின் இன்னும் எத்தனை கோடிகளைச் சுருட்டி வீட்டின் மூலைகளுக்குள் வைத்துக் கொண்டிருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

அப்படியென்றால் அடுத்தது அவர்களா? பலே வெள்ளையத் தேவா? உன் வீரம் கண்டு மெச்சினோம். தொடரட்டும் உன் வீர விளையாட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எதிரிகள் ‘ஜி’ யும் அங்கிளும்...” கூட்டாளி யார்? – விஜய்

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டால் மதுரையே ஸ்தம்பித்துதான் போனது. பாரப்பத்தியில் நடந்த இந்த மாநாட்டில், “தாமரை இலையில் தண்ணியே ஒட்டாது... தமிழ்நாட்டு மக்கள் மட்டும் எப்படி ஒட்டுவாங்க ஜி...” எனப் பிரதமர் மோடியை வறுத்தெடுத்த த.வெ.க தலைவர் விஜய், சட்டம்- ஒழுங்கு, இயற்கை வளம், பொதுமக்களுக்கு இங்க பாதுகாப்பு இருக்கா ஸ்டாலின் அங்கிள்” என தி.மு.கவையும் காய்ச்சியெடுத்திருக்கிறார். கூட்டணி தொடர்பான விடயம் குறித்து, “சிங்கத்துக்குத் தனியாக வரவும் தெரியும்...” எனப் பூடகமாக விஜய் சொன்னாலும் காங்கிரஸ் கட்சியையும் அ.தி.மு.கவையும் அவர் பெரிதாக விமர்சிக்காதது, அரசியல் வட்டாரங்களில் கூட்டணியோடு தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகிறது. அண்ணாவையும் எம்.ஜி. ஆரையும் முழுவதுமாக கபளீகரம் செய்ததோடு, “நான் எம்.ஜி.ஆரோடு



பழகியதில்லை. ஆனால், புரட்சிக் கலைஞர் கப்டன் விஜயகாந்த்தோடு பழகியிருக்கிறேன்...” என மறைந்த தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த்தையும் தன் பக்கம் இழுத்து கூட்டணிக்கான ஒரு புது ரூட்டைப் போட்டிருக்கிறார் விஜய்!

யாரும் எதிர்பார்க்காத கூட்டம், இளைஞர்கள் பட்டாளம், விஜயின் வழக்கமான பேச்சு எனப் பல இடங்களில் இந்த மாநாடு ‘ஸ்கோர்’ செய்திருந்தாலும், மக்கள் பிரச்சினைகளை முதன்மைப்படுத்துவதிலும் தங்களுடைய அரசியல் பயணத்தைத் தெளிவுபடுத்துவதிலும் சறுக்கவும் செய்திருக்கிறது. “234 தொகுதிகளிலும் நானே போட்டியிடுவதாக நினைத்து களப்பணியாற்றுங்கள்.” எனத் தொண்டர்களுக்கு உத்தரவிட்டிருக்கும் விஜய், ‘2026இல் த.வெ.க-வுக்கும் தி.மு.க-வுக்கும்தான் போட்டி’ என மீண்டும் அழுத்திச் சொல்லியிருக்கிறார்.

**எதிர்பாராத கூட்டம்... திரண்டு வந்த தொண்டர்கள்!**

‘மதுரைக்கு அருகே பாரப்பத்தியில், ஆகஸ்ட் 21 ஆம் திகதி மாநில மாநாடு நடைபெறும்’ என அறிவித்தபோதே பரபரப்பாகிவிட்டார்கள் த.வெ.க தொண்டர்கள். 500 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் சுத்தம் செய்யப்பட்டு, வாகன நிறுத்தத்துக்காக மட்டுமே சுமார் 300 ஏக்கர் இடம் ஒதுக்கப்பட்டது. காவல்துறை சொன்ன 40இற்கும் மேற்பட்ட நிபந்தனைகளையும் சமாளித்த த.வெ.க நிர்வாகிகள், அசராமல் வேலைகளைத் தொடர்ந்தனர். பேரறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆருடன் விஜய் இருப்பது போன்ற படங்களும், விஜயகாந்துடன் விஜய் இருப்பது போன்ற பதாகைகளும் மாநாட்டில் அதிகமாகக் காணப்பட்டன. காலை 7 மணியிலிருந்தே மக்கள் குவியத் தொடங்கியதால், 10 மணிக்கெல்லாம் திடலில் கூடியிருந்தவர்களின் கூட்டம் லட்சத்தைத் தாண்டிவிட்டது. ஒருகட்டத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த 3,500 பொலிஸாராலும், 2,500 பவுன்சர்களாலும்கூட கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்தது தொண்டர்கள் கூட்டம். புதிதாகத் தொடங்கப்பட்ட ஓர் அரசியல் கட்சிக்கு, பணம் கொடுக்காமல் இவ்வளவு கூட்டம் கூடியதே ஆச்சரியமான விடயம்தான்.

ஒருகட்டத்தில், கிரீஸ் தடவிய கம்பிகள் மீதும் ஏறி விஜய் நடக்கவிருந்த ‘ரேம்ப் வாக்’கை தொண்டர்கள் நெருங்கவும் மாநாட்டை முன்கூட்டியே தொடங்கும் முடிவுக்கு வந்தது மாநாட்டு கமிட்டி. மாலை 3:46 மணிக்கு மேடைக்கு வந்த விஜய், மாவட்டச் செயலாளர்களுக்கு வணக்கம் வைத்தபடி ‘என்ட்ரி’ கொடுத்தார். முதல் மாநாட்டில் மேடைக்குக் கீழே அமரவைக்கப்பட்டிருந்த விஜயின் பெற்றோர் எஸ்.ஏ.சந்திரசேகரும் ஷோபாவும் இந்த முறை மேடையிலேயே அமரவைக்கப்பட்டனர். அவர்களிடம் ஆசிபெற்ற விஜய், ‘ரேம்ப் வாக்’ சென்றபோது, ஆர்ப்பரித்த தொண்டர்களின் அன்புத் தொல்லையில் சிக்கிக்கொண்டார். கம்பிகளை எகிறிக் குதித்துவந்த தொண்டர்கள் சிலர், விஜயைத் தொட்டுவிடப் பாய, அவர்களைக் கட்டுப்படுத்துவதற்குள் பாதுகாவலர்கள் திணறிப் போனார்கள். ஒருவழியாக மேடைக்குத் திரும்பிய விஜய், தனது கட்சியின் கொள்கைத் தலைவர்களின் படங்களுக்கு மரியாதை செலுத்திவிட்டு, மாநாட்டைத் தொடங்கினார்.

**விஜயின் சிங்கக்கதை!**

ஒரு சிங்கக் கதையுடன் தன் பேச்சைத் தொடங்கிய விஜய், “வேட்டையாடுவதற்காக மட்டுமே சிங்கம் வெளியே வரும். அதற்குக் கூட்டத்தோடு இருக்கவும் தெரியும். தனியாக வரவும் தெரியும். காட்டுக்குள்ள குள்ளநரிங்க நிறைய இருந்தாலும், சிங்கம் சிங்கம் தான்...” எனத் தன் பாணியில் பேசத் தொடங்க, “தலைவர் தனியாகப் போட்டியிடப்போவதாக அறிவிக்கப்போகிறாரோ.” என மாநாட்டுத் திடலில் பரபரப்பு கிளம்பியது.

கூட்டத்தின் ‘ஹீட்டை’ ஏற்றிவிட்டு, “நான் எம்.ஜி. ஆரோடு பழகியதில்லை. ஆனால், புரட்சிக் கலைஞர் விஜயகாந்த்தோடு பழகும் வாய்ப்பு கிடைத்தது...” என டேக் டைவர்ஷன் போடவும், “அ.தி.மு.க., தே.மு.தி.கவோடு கூட்டணிக்கு அடி போடுறார் போல... ஒண்ணுமே புரியலையே...” எனக் குழம்பினார்கள் தொண்டர்கள்.

தொடர்ந்து பேசிய விஜய், “இந்த மாநாட்டுக்கு ‘வாகை சூடும் வரலாறு திரும்புகிறது’ எனப் பெயர் சூட்டியிருக்கிறோம். ‘த.வெ.க எப்படி ஆட்சியைப் பிடிக்கும்... கூட்டம் எப்படி ஓட்டாக மாறும்’ என்று நிறைய அரசியல் ஆய்வாளர்கள் கேள்வி கேட்கறாங்க. ‘இந்தக் கூட்டம், ஆட்சியாளர்களுக்கு வேட்டாக, கோட்டைக்குப் போகும் ரூட்டாக மாறப் போகிறது’ என்பதுதான் அவர்களுக்கு என்னோட பதில். பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், ஆதரவற்ற முதியோர், திருநங்கைகள், விவசாயிகளின் துயர் துடைப்பதற்காகத் தொடங்கப்பட்ட இயக்கம்தான் த.வெ.க. மறைமுகமாக பா.ஜ.கவோடு உறவு வைத்துக் கொண்டு ஊரை ஏமாத்துற கட்சி த.வெ.க கிடையாது. நாம் வெகுஜன மக்கள் படை...” என்று பேசியவர், பிரதமர் மோடியையும் முதல்வர் ஸ்டாலினையும் நேரடியாகவே தாக்கத் தொடங்கினார்.

**“மக்கள் ஒட்டமாட்டாங்க ஜி... கேக்குதா ஸ்டாலின் அங்கிள்...”**

“பிரதமருக்கு நாம் முன்வைக்கிறது இரண்டு முக்கியமான கோரிக்கைகள் தான். ‘கச்சத்தீவை மீட்டுக்கொடுங்க, நீட் தேர்வை ரத்து செய்யுங்கள், இந்த இரண்டையும் செய்வீங்களா நரேந்திர தாமோதரதாஸ் மோடி ஜி. தாமரை இலையில தண்ணீரே ஒட்டாது. பின்ன, தமிழ்நாட்டு மக்கள் மட்டும் எப்படி ஒட்டுவாங்க ஜி... ஆட்சி அதிகாரத்தைக் கையில வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்ற பாசிச பா.ஜ.க அடிமைக் கூட்டணி ஒன்று. அடுத்ததாக, ஆர்.எஸ்.எஸ் அடிமை குடும்பம் என்று ஒரு கூட்டணி... இப்படி மிரட்டி அடி பணிய வைத்து, 2029 வரைக்கும் ஆட்சியை நடத்திடலாம் என்று நினைக்குறீங்க, அப்படித்தானே ஜி” எனப் பிரதமர் மோடியைப் போட்டுத் தாக்கிவிட்டு, “பாசிச பா.ஜ.க-வோடு மறைமுகமாகக் கூட்டணி வைத்துக்கொள்ள, நாம என்ன உலகமகா ஊழல் கட்சியா என்ன” என ஸ்டாலின் பக்கம் வண்டியைத் திருப்பினார் விஜய்.

இந்த தி.மு.க ஆட்சியில நேர்மை இருக்குதா? சட்டம்-ஒழுங்கு சீராக இருக்குதா? இயற்கை வளத்துக்குப் பாதுகாப்பு இருக்குதா? பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் மட்டும் போதுமா? எனக் கூட்டத்தைப் பார்த்து விஜய் கேள்வி கேட்கவும், “இல்லை இல்லை” எனத் தொண்டர்கள் ஆர்ப்பரித்தனர். உடனே, “மை டியர் ஸ்டாலின் அங்கிள், மக்களோட இந்தச் சத்தம் கேட்குதா அங்கிள். திஸ் இஸ் வெரி ராங் அங்கிள்” என வறுத்தெடுத்தார். பிரதமரையும் முதல்வரையும் பெயர் குறிப்பிட்டு, மேடையில் விஜய் விமர்சிப்பது இதுவே முதன்முறை என்பதால், மாநாட்டில் சத்தம் அதிர்வைக் கிளப்பியது.

“கட்சி ஆரம்பித்த பின்பு தான் எல்லோரும் ஒவ்வொருத்தர் வீட்டுக்கும் போவார்கள். ஆனால் நாங்கள் ஒவ்வொரு வீட்டுக்குள்ளயும் போன பிறகு தான் கட்சியையே ஆரம்பிச்சிருக்கிறோம். மார்க்கெட் போன பிறகு அடைக்கலம் தேடி நான் வரவில்லை படைக்கலனோடு வந்திருக்கிறேன். எல்லா அரசியல்வாதியும் புத்திசாலி கிடையாது, எல்லா சினிமாக் காரனும் முட்டாள் கிடையாது. 234 தொகுதிகளிலும் நான் போட்டியிடுவதாக நினைத்து களப்பணி செய்யுங்கள். என்று பேச்சை நிறைவுசெய்தார் விஜய். மாநாட்டில் ஆறு தீர்மானங்களை நிறைவேற்றத் திட்டமிட்ட நிலையில் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் பெரிய அளவில் சிரமம் ஏற்பட்டதால் ‘தீர்மானங்களைப் பிற்பாடு வெளியிடுகிறோம்’ என்று சொல்லிவிட்டு அவசர அவசரமாக மாநாட்டை நிறைவு செய்தனர்.

மாநாட்டுக்கு வந்தவர்கள் கலைந்து செல்வதற்கே பல மணி நேரம் ஆகியிருக்கிறது. அந்த அளவுக்குக் கூட்டம். மாநாட்டை மொத்தமாகக் கண்காணித்த மத்திய உளவுத்துறை அதிகாரிகள், டில்லித் தலைமைக்கு உடனடியாக ரிப்போர்ட்டை அனுப்பியிருக்கிறார்கள். தனக்குப் பின்னால் பெரும் படை இருக்கிறது என்பதைப் பலருக்கும் இந்த மாநாட்டின் மூலம் சொல்லியிருக்கும் விஜய், கட்சிக் கட்டமைப்பை வலுப்படுத்தும் பணியில் தீவிர கவனம் செலுத்தினால் மட்டுமே இந்தப் பெரும் படையை, வாக்காக மாற்றக்கூடிய இயந்திரத்தை அவரால் தயார் செய்ய முடியும். “கூட்டணியைவைத்துத் தப்பிவிடலாம் என நினைத்துவிடாதீர்கள்” என்று தி.மு.க-வைப் போட்டுத் தாக்கிய விஜய், தன் கூட்டணிக்கான கதவுகளை விசாலமாகத் திறந்து வைத்திருப்பதையும் மறைமுகமாகச் சொல்லி முடிந்திருக்கிறார். சஸ்பென்ஸிலேயே சஞ்சாரம் செய்யுங்கள்’ என்று விஜய் சொல்லியிருப்பதற்கான விடை, இன்னும் சில மாதங்களில்!

ஜுனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு அருள்வார்



குரு சிஷ்யனை அறிவார். அவன் நிலைமையை அறிவார். அவன் தேவையையும் அறிவார். ஏன்? எதற்கு? எப்படி? என்றெல்லாம் தர்க்கம் செய்யாமல், அவர் வார்த்தைகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் மாணவனிடம்தான் எதுவாக இருந்தாலும் குரு பார்த்துக்கொள்வார் என்கின்ற நம்பிக்கை இருக்கும். குரு - சிஷ்ய உறவில் இந்த நம்பிக்கை மிக முக்கியம்.

குருகுலத்தில் ஒருநாள் மாணவன் ஒருவன் குருவின் முன்னால் வந்து நின்றான். "குருவே அடுத்த மாதம் என் சகோதரிக்குத் திருமணம். ஊருக்குச் செல்ல எனக்கு அனுமதி தர வேண்டும். நீங்களும் வர வேண்டும்" என்றான்.

"என்னால் வர முடியுமா? என்று தெரியவில்லை." ஆனால் நிச்சயம் உன்னை அனுப்பி வைக்கிறேன் என்றார் குரு.

அந்த மாணவன் வறியவன். தன் சகோதரியின் திருமணத்துக்கு குரு உதவுவார் என்று நம்பினான். செல்லும் நாள் வந்தது. குரு, அந்த மாணவனுடன் மேலும் இருவரைப் போகச் சொன்னார். மாணவனிடம் ஒரு பையைக் கொடுத்தார். "உன் சகோதரியின் திருமணம் பிரமாண்டமாக நடக்க இறைவன் அருள் புரிவாராக! என்று வாழ்த்தினார். பையில் இருந்தவை மாதுளம் பழங்கள். எப்படியும் ஐந்து கிலோ இருக்கும்.

வழியில் உடன் வந்த ஒருவன் சொன்னான் "குரு, மாதுளம் பழத்தைப் போய்க் கொடுத்துவிடுகிறாரே இதை வைத்து என்ன செய்வது?

"குருவைப் பழிக்காதே" என்று கடுகடுத்தான் மாணவன். ஆறு நாட்கள் நடந்து, ஊரை அடைந்தார்கள். அப்பாவும் அம்மாவும் மாதுளம் பழங்களைப் பார்த்து ஏமாற்றமடைந்தார்கள். அது பாலைவனப்பகுதி. சுற்றிலும் மரம், செடி கொடிகள் இல்லை.

அதேநேரத்தில், அந்தப் பகுதியை ஆண்ட குறுநில மன்னனின் மகள் திடீரென்று நோய்வாய்ப்பட்டிருந்தாள். பரிசோதித்த மருத்துவர், "மன்னா, நாளைக்குள் ஒரு மருந்தை மாதுளம்பழச் சாற்றோடு கலந்து இளவரசிக்குக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் காப்பாற்றுவது கடினம்" என்று கூறிவிட்டார். அது பாலைவனப் பகுதி, மரங்களே கிடையாது. மாதுளம் பழங்களுக்கு எங்கே போவார்கள். அது கிடைக்கும் இடத்திற்குப் போய், கொண்டுவர எப்படியும் ஏழெட்டு நாட்கள் ஆகிவிடும். மன்னர் துடிதுடித்துப் போனார்.

விடயம் ஊரெங்கும் பரவியது. மாணவன், குரு கொடுத்தனுப்பிய மாதுளம் பழங்களோடு மன்னர் முன்னால் போய் நின்றான். மாதுளம் பழச்சாற்றில் மருந்தைக் கலந்து கொடுத்ததும் இளவரசி பிழைத்தாள்.

மன்னர், மாணவனை விசாரித்தார். அவன் சகோதரிக்குத் திருமணம் என்பதை அறிந்தார். "இது என் இல்லத் திருமணம். ஊரே திரண்டு வரட்டும் கொண்டாடுவோம்" என்று தண்டோராவில் அறிவிக்கச் சொன்னார். பிறகென்ன மாணவன் சகோதரியின் திருமணம் ஜாம் ஜாமென்று நடந்தது. பொற்காசுகளும், தங்க ஆபரணங்களும் பரிசுகளாகக் குவிந்தன. ஒரே நாளில் அந்த வீட்டின் நிலைமையே தலைகீழாக மாறியது. குருவின் கருணையில் கரைந்த மாணவன், அவர் இருக்கும் திசையை நோக்கி மானசிகமாக வணங்கினான்.

# ஆச்சி அறிவுரை



## கோவில்களில் இப்படியும் நடக்கிறது!

### பேராண்டி...

போன கிழமை கோவிலுக்குப் போட்டு வரேக்குள்ள "மந்திரம் ஏன் எங்களுக்குப் புரியாமல் இருக்குது?" எண்டு கேட்டணி எண்டு கொம்மா சொன்னவள். சமஸ்கிருதம் மிகப்பழமையான மொழி. கிட்டத்தட்ட 3500 ஆண்டு பழமையானது எண்டால் யோசிச்சுப்பாரன். அதோட இந்து மதத்தின்ர மிக முக்கிய புனிதநூல்களான வேதம், உபநிடதம் போன்ற நூல்கள் பல சமஸ்கிருதத்திலைதான் எழுதப்பட்டிருக்கு.

பேராண்டி, சமஸ்கிருத மந்திரத்திலை பல்லாயிரக்கணக்கான அர்த்தங்கள் பொதிந்திருக்குது. அது மிகவும் தூய்மையான மொழி. அதால சமஸ்கிருதம் இறைமொழி என்றாகிட்டுது.

ஈழத்திலை வாழ்ந்த சிவாச்சாரியார்கள் பலர் மிகவும் அறிவாளிகளாக இருந்திருக்கினம். அதிலும் மறைந்த சிவஸ்ரீ தாணு மகாதேவக் குருக்கள் மிகச்சிறந்த கல்விமான். அவர் குருகுலம் எண்டுற வேதாகம பாடசாலையொன்றை மிகச்சிறந்த முறையில் நடத்தினவர்.

அவரிட்ட வேதாகமம் படிச்ச பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இண்டைக்கு கோவில்களிலை சேவை செய்யினம். அதோட வேதாகமங்களை யாரும் படிக்கலாம். இறைவனுக்கு யாரும் மந்திர உட்சாடனம் செய்யலாம் எண்டு, பிராமணர்கள் தவிர்ந்த பலருக்கும் மந்திர உட்சாடனங்களைக் கற்பித்த பெருமை அவரையே சேரும்.

ஏன், எங்கட மாவை கலட்டி பிரான்கிளி பராசக்தி அம்மன் கோவில் பூசகர்கள் அவரிட்டை மந்திரம் படிச்சவைதான் பேராண்டி. இப்படிப்பட்ட புனித சேவையை சிலர் துஷ்பிரயோகம் செய்யினம் எண்டு நினைக்க மனம் நெருடுது.

ஓம், பேராண்டி! இப்ப சில சிவாச்சாரியார்கள் மலையகப் பக்கங்களில இருந்து ஆள்பிடிச்சு வந்து அவர்களுக்கு மேலோட்டமா சில மந்திரங்களைச் சொல்லிக்கொடுத்து கோவில்களிலை பூசைக்கு விடுகினமாம். கோவில்காரரிட்டை மாசா மாசம் நல்ல காசு வாங்கிட்டு, அந்தப் பூசகர்களுக்கு கொஞ்சத்தைக் குடுத்திட்டு மிச்சத்தை ஏப்பம் விடுகினமாம்.

இது எவ்வளவு கொடுமையானது தெரியுமோ? கடவுள் விஷயத்திலை இப்படிச் செய்யிறது, அதுவும் கடவுளோட நேரடித் தொடர்பைப் பேணுறவை செய்யிறது சரியில்லையெல்லோ? அவை கூட்டி வந்தவர்கள் தீட்சை பெற்றவர்களா? உண்மையா ஆசாரசீலர்களா வாழுகினமா? அவை சொல்லுற மந்திரங்கள் சரியானதா? எண்டுறதுகளை நினைக்க நெஞ்சம் பதை பதைக்குது.

ஒரு சிலர் பொறுப்பில்லாமல் செய்யிற பிழை, பல நல்லவர்களைப் பாதிக்கும். அது இந்த விசயத்திலை நூறு விகிதம் பொருந்துது. கடவுளுக்கும் பக்தனுக்கும் நடுவில நிக்கிற தூதுவன் பூசகர். அவர் மனத்தூய்மையா இருந்தால்தான் பக்தரின்ர வேண்டுதல் கடவுளைப் போய்ச் சேரும். அப்படிப்பட்ட புனிதத்துவத்துக்கு இழுக்கு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது சம்மந்தப்பட்டவையின்ர தார்மீகக் கடமை பேராண்டி.

ஆச்சி வருவா...

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எனக்கு நானே விதித்துக் கொண்ட 10 கட்டளைகள்!




1. பசிக்காமல் அமிர்தமே ஆனாலும் உண்ணாதே. தினமும் பத்து நிமிடமாவது கையைக் காலை ஆட்டு.
2. கழிப்பறையிலாவது சுவாசத்தைக் கவனி.
3. எதிர்மறைகளில் இருந்து தப்பித்து விலகி, நெருப்பு வளையமிட்டு, அதற்கு நடுவே ஒளிந்துகொள்.
4. கேட்பது, பார்ப்பது, படிப்பது மூன்றிற்கும் சம அளவு முக்கியத்துவம் தந்துவிடு.
5. எதிலுமே மிதமான போதைக்கு உன்னைப் பழக்கு.
6. உறவுகளிடம் காது என்கிற உறுப்பை அதிகம் பயன்படுத்து.
7. யாராக இருப்பினும் தேவைக்கு அதிகமாக எதையும் சொல்லாதே. தேவைக்கு அதிகமான எதையும் கேட்காதே.
8. நன்றாகப் பழக்கமான உச்சிக் கிளை என்றாலும் சிறு பிடிமானமாவது இல்லாமல் நிற்காதே.
9. நீராய் உன்னைப் பாவனை செய்துகொள். வாய்க்கிற எந்தப் பாத்திரத்திலும் நிறைவாய் நிறைந்துகொள்.
10. நிதமும் இப்படி எதையாவது, மாடு எந்நேரமும் அசை போடுகிற மாதிரி எண்ணிக் கொண்டிருக்காமல், குறைந்த பட்சம் ஒரு தேநீரையாவது இரசித்துக் குடி.

# அடுக்களைப் பக்கம்



✦ தினமும் நெய்யை அடுப்பில் வைத்து உருக்கினால், மணமும், ருசியும், நிறமும் மாறிவிடும். நெய்யை உருக்க நினைக்கும் போது, ஒரு எவர்சில்வர் ஸ்பூனை 10, 15 விநாடிகள் தீயில் காட்டி சூடு பண்ணி, நெய் பாத்திரத்தின் ஒரு மூலையில் செருகுங்கள். உடனே அந்த ஓரத்தில் நெய் உருகிவிடும். உருகிய பகுதியை மட்டும் ஸ்பூனால் எடுத்து, பரிமாறினால் போதும். மற்ற பகுதியில் உள்ள நெய் நிறம் மணம் மாறாமல் இருக்கும்.

✦ சாப்பிட்டதும் சிலருக்கு ஜூஸ் அல்லது குளிர்பானம் குடித்தாக வேண்டும். சிலர் சாப்பிடும்போதே, இடையிடையே ஜூஸ் குடிக்கிறார்கள். இவை இரண்டுமே நல்லதல்ல. சாப்பிட்டு அரைமணி நேரம் கழித்து ஒரு டம்ளர் வெந்நீர் அருந்தலாம். பொரித்த உணவுகளைச் சாப்பிடும்போது அவற்றிலுள்ள கொழுப்புச் சத்தைக் கரைத்து, செரிமானச் செயற்பாடு எளிதாக வெந்நீர் உதவும்.





## சமைப்போம் சுவைப்போம்

# மரவள்ளிக்கிழங்கு மசால் வடை



### தேவையானவை :

மரவள்ளிக்கிழங்கு – கால் கிலோ
கடலைப்பருப்பு – 200 கிராம் (ஊற வைத்தது)
பச்சரிசி மா – ஒரு கைப்பிடி அளவு
இஞ்சி – ஒரு இன்ச் துண்டு (தோல் சீவவும்)
பூண்டு – 10 பல்
சோம்பு – ஒரு டீஸ்பூன்
பட்டை – சிறு துண்டு
கிராம்பு – 2
பச்சை மிளகாய் – 4
காய்ந்த மிளகாய் – 4
புதினா – ஒரு கைப்பிடி அளவு
வெங்காயம் – 100 கிராம் (நறுக்கவும்)
உப்பு – தேவைக்கேற்ப
எண்ணெய் – 500 மில்லி

### செய்முறை

மரவள்ளிக்கிழங்கைத் தோல் சீவி துருவிக்கொள்ளவும். ஊறவைத்த பருப்புடன் இஞ்சி, பூண்டு, சோம்பு, பட்டை, கிராம்பு, பச்சை மிளகாய், காய்ந்த மிளகாய், உப்பு சேர்த்துக் கொர கொரப்பாக அரைத்துக்கொள்ளவும். பின்பு அதில் துருவிய மரவள்ளிக்கிழங்கு, நறுக்கிய வெங்காயம், புதினா, அரிசி மா சேர்த்துப் பிசையவும். வாணலியில் எண்ணெய்விட்டு காய்ந்ததும் மாவைச் சிறு சிறு வடைகளாகத் தட்டி எடுக்கவும். மரவள்ளிக்கிழங்கு மசால் வடை தயார். இது தயிர் சாதத்திற்கு சுவையாக இருக்கும்.

**குச்சிக்கிழங்கு, குச்சிவள்ளிக்கிழங்கு, மரச்சினிக்கிழங்கு என்றும் மரவள்ளிக்கிழங்கு அழைக்கப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தடம்மாறும் தாய்மை!

## குழந்தை பெற்றுக்கொடுக்கும் ரோபோட்

குழந்தையைச் சுமக்கக் கூடிய செயற்கையான கருப்பையைக் கொண்டிருப்பதன் மூலம் இன்னும் சில ஆண்டுகளில் கர்ப்பமாகக்கூடிய மனித உருவ ரோபோக்களை அறிமுகப்படுத்த உள்ளது சீனா.

சீனாவின் குவாங்சோ நகரில் உள்ள கைவா டெக்னாலஜிஸ் என்ற நிறுவனம்தான் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. இந்தத் திட்டத்தைத் தலைமை தாங்கும் டாக்டர் ஜாங் கிஃபெங், பெய்ஜிங்ரோபோட் மாநாட்டில், இதனைச் சாத்தியப்படுத்தும் அறிவியல் தொழில்நுட்பம் ஏற்கெனவே உள்ளதாகக் கூறியுள்ளார்.

கருப்பையை ஒரு ரோபோவின் வயிற்றில் வைப்பது மட்டுமே பாக்கி என்றும் கூறியிருக்கிறார். இந்தத் தொழில்நுட்பத்தால் வாடகைத் தாய் மூலம் குழந்தையைப் பெற்றுக் கொள்வது மாறும் என்கின்றனர்.



**எப்படி செயற்படும்?**

ரோபோவின் வயிற்றுக்குள் வைக்கப்படவுள்ள இயந்திரம் முழுக்க முழுக்க உண்மையான கருப்பையை நகல் எடுத்து செயற்படுவது போல செயற்கையாக உருவாக்கப்படும்.

இதில் செயற்கை அம்னோடிக் திரவம் நிரப்பப்பட்டிருக்கும். மற்றும் ஒரு குழாய் தொப்புள் கொடியாகச் செயற்பட்டு ஊட்டச்சத்துக்கள் மற்றும் ஆக்ஸிஜனை வழங்கும்.

இதற்கு முன்னர் 2017ஆம் ஆண்டு, அமெரிக்க விஞ்ஞானிகள் குறைப் பிரசவத்தில் பிறந்த ஆட்டுக்குட்டிகளை இதேபோல உயிரி-பைகள் என்ற அமைப்பை உருவாக்கி அதில் அதிகநாட்கள் உயிருடன்வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்போது டாக்டர் ஜாங் கிஃபெங்கின் குழுவினர் கருவையே ரோபோவில் வைத்து வளர்க்க முயற்சிக்கின்றனர். 10 மாதங்களும் குழந்தையை ரோபோ சுமக்கும். வாடகைத்தாய் முறையில் குழந்தை பெற்றுக் கொள்வதைவிட இந்த முறையில் செலவு குறைவு என்கின்றனர். தற்போதைய தகவல்களின்படி, 1,00,000 யுவான். இந்தியா மதிப்பில், சுமார் 12 இலட்சம் செலவாகலாம்!

**இந்த கண்டுபிடிப்புக்கான தேவை என்ன?**

சீனாவில் மனிதர்களிடையே கருவுறாமை அதிகரித்து வருகிறது. 2007ஆம் ஆண்டு சுமார் **12%** தம்பதிகள் கருவுறாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. 2018இல் இது **18%** ஆக அதிகரித்துள்ளது.

பலருக்கும் செயற்கை கருவுறுதல், ஐ.வி.எஃப் முயற்சிகள் பலனளிக்காமல் போயிருக்கின்றன. இத்தகைய குடும்பங்களுக்கு பலனளிக்கலாம் என்பதனால் இந்தத் தொழில்நுட்பத்துக்கு வரவேற்பு உள்ளது. அதேபோல சிலர் எதிர்க்கவும் செய்கின்றனர்.

**சிலர் எதிர்ப்பது ஏன்?**

கருவைச் சுமக்க இயந்திரங்களை நாடுவது குழந்தைக்கும் தாய்க்குமான பிணைப்பை பாதிக்கும் என்றும் சமூகம் பெற்றோரை பார்த்த விதத்தை மாற்றும் என்றும் கூறுகின்றனர்.

பெண்ணிய சிந்தனையாளர் ஆண்ட்ரியா டுவோர்கின் ஒருமுறை செயற்கை கருப்பைகள் "பெண்களின் முடிவை" குறிக்கும் என்று கூறியதைக் குறிப்பிடுகின்றனர்.

இந்த விவகாரத்தில் கைவா டெக்னாலஜிஸ் நிறுவனத்திடம், "பெற்றோராக யார் கருதப்படுகிறார்கள்? ரோபோவால் பிறந்த குழந்தைக்கு என்ன உரிமைகள் உள்ளன?

கருமுட்டை யாரிடம்இருந்து பெறப்படும்? முட்டைகள், விந்து அல்லது கருப்பை இயந்திரங்களின் கறுப்புச் சந்தையை எவ்வாறு நிறுத்துவது?" போன்ற சட்டப்பூர்வ கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

மனிதர்களின் சட்டங்களையும் இயற்கையின் விதிகளையும் மீறி வேகமாக வளருகிறது அறிவியல். இந்த தொழில்நுட்பம் குழந்தை பிறப்பை பண்டமாக்குவதாகவும், மனித பிணைப்பின் முக்கியத்துவத்தை மங்கச் செய்வதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இது பரவலாக்கப்பட்டால் கர்ப்பம் என்பது இயற்கையான வாழ்வியல் நிகழ்வாக அல்லாமல் சமாளிக்க வேண்டிய நோயைப் போல பார்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என மருத்துவத்துறையினர் எச்சரிக்கின்றனர்.

மறுபுறம் 2026இற்குள் முதல் குழந்தை ரோபோவிடமிருந்து பிறப்பதைக் காண ஆவலாகத் தயாராகி வருகிறது தொழில்நுட்ப உலகம்!

# தெளிவே என் சிந்தனையுள்... 24

அந்த ஊருக்கு துறவியொருவர் வந்திருந்தார். அவரைக் கண்டு அவரிடம் ஆசி பெற ஊர்மக்கள் அனைவரும் பலகாரம், பழங்கள் என்பவற்றை எடுத்துச் சென்றனர்.

ஊரில் ஒரு இளைஞன் அவரிடம் ஆசிபெற விரும்பினான். ஆனால் சுவாமிகளுக்கு வழங்க அவனிடம் எதுவும் இருக்கவில்லை.

ஆயினும் அவரின் இருப்பிடம் சென்று தயக்கத்துடன் "சுவாமி தங்களிடம் ஆசிபெற வந்தேன். உங்களுக்குத் தர எதுவும் என்னிடம் இல்லை" என்றான் தயக்கத்துடன்.

அதற்கு சுவாமி கோபத்துடன் கூறினார். "முதலில் அதை வெளியே எடுத்து எறி" என்று.

பயந்துபோன இளைஞன் "சுவாமி என்னிடம் தான் எதுவுமே இல்லையே. எதை எறிவது" என்று பணிவுடன் கேட்டான்.

"அட எதுவுமே இல்லை என்ற எண்ணத்தை தூக்கி எறி" என்றார் சுவாமி பரிவுடன்.

இளைஞனும் தன்னிடம் எதுவும் இல்லை என்ற குற்ற உணர்வை மறந்து, சுவாமியிடம் ஆசி வேண்டி புத்துணர்வுடன் புறப்பட்டான்.

**அன்பானவர்களே!**

எதை நாம் நினைக்கின்றோமோ அதுதான் எம் வாழ்க்கையில் பின் தொடரும்.

இதைத்தான் எண்ணம்போல் வாழ்க்கை என்கிறார்கள்.

இதைத்தான் டாக்டர் அப்துல் கலாம் "கனவு காண்" என்று கூறினார்.

எம்மிடம் எதுவும் இல்லை என்ற எண்ணம் எம் மனதில் இருக்கும் வரை எம்மிடம் எதுவும் வந்து சேராது இதுவே இயற்கை நியதி.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதை

## நம்பகத்தன்மைக்கான பாதை: ஆளுகை பற்றிய கரிசனைகள் தொடர்பாக இலங்கை என்ன செய்கிறது?

பகுதி IV

இலங்கையின் மீட்சிக்கான பாதை: கடன் மற்றும் ஆளுகை எனும் தொனிப்பொருளில் 2025 யூனில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் இணைந்து மாநாடு ஒன்றினை நடாத்தியிருந்தன. இலங்கையின் சமீபத்திய பொருளாதார நெருக்கடி மற்றும் நெருக்கடியிலிருந்தான மீட்சி தொடர்பாக பல முக்கிய விடயங்கள் இம் மாநாட்டில் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தன.

இவ் விடயங்களில் பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயங்களை தொகுத்து வழங்கும் நோக்கில் இக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இத்தொடரின் நான்காவது கட்டுரை "நம்பகத்தன்மைக்கான பாதை: ஆளுகை பற்றிய கரிசனைகள் தொடர்பாக இலங்கை என்ன செய்கிறது? (The Road to Credibility: What is Sri Lanka Doing about Governance Concerns?)" என்ற தலைப்பில் நடைபெற்ற அமர்வின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக வழங்குகிறது. இவ் அமர்வினை சர்வதேச நாணய நிதியத்தின் சட்டத் திணைக்களத் துணைப் பிரிவுத் தலைவர் திரு. ஜோயல் டர்க்விட்ஸ் தொகுத்து வழங்கினார். முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கௌரவ (முனைவர்) ஹர்ஷன சூரியப்பெரும, திரு. கே.பீ. ராஜபக்ஷ (இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளர்), திரு. முர்தசா ஜபர்ஜி (அட்வகாட்டா நிறுவனத்தின் தலைவர்) மற்றும் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம (பேராதெனிய பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியர்) ஆகியோர் இக்கலந்துரையாடலின் போது தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

இலங்கை சமீபத்திய ஆண்டுகளில் கடுமையான சமூகப் பொருளாதார சவால்களிற்கு முகங்கொடுத்தது. இவ் நெருக்கடியானது, அதிகரித்த பொதுக் கடன், தாழ்ந்த வரி வருமானம், தொடர்ச்சியான வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை, பொருத்தமற்ற பொருளாதார கொள்கைகள் மற்றும் தாமதமான கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் போன்ற நீண்டகால தொடர்ச்சியான சவால்களில் இருந்து தோற்றம் பெற்றிருந்தது. அதுமட்டுமல்லாது, இச் சமீபத்திய பொருளாதார நெருக்கடியானது நாட்டின் ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் கட்டமைப்பு தொடர்பிலான ஆழமான மற்றும் அமைப்பு சார்ந்த பலவீனங்களையும் சவால்களையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஆளுகை என்பது ஒரு நாடு அல்லது அமைப்பு எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது மற்றும் எவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதைக் குறிக்கும். அதே நேரத்தில் நம்பகத்தன்மை என்பது குடிமக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் உலகளாவிய பங்காளர்கள் இந்த நிறுவனங்களின் முடிவுகள் மற்றும் செயற்றிறனில் வைக்கும் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது.

பொறுப்புக்கூறல் என்பது அதிகாரிகள் தங்கள் செயல்களுக்கும் பொது வளங்களைப் பயன்படுத்திய விதத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய கட்டாயத்தை உறுதி செய்கிறது. இம் மூன்று கோட்பாடுகளும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியை அடைவதற்கும் அரசியல் நிலைத்தன்மையை பேணுவதற்கும் அடிப்படையாக அமைகின்றன. நம்பகத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் மூலம் வலுப்படுத்தப்படும் நல்லாளுகை, வெளிப்படைத்தன்மையை முன்னெடுத்து நிலையான கொள்கை அமுலாக்கத்தை உறுதிப்படுத்துகின்றது. மேலும், இது ஊழல் தடுப்பில் முக்கிய பங்கு வகித்து, பொதுமக்கள் மற்றும் சர்வதேச பங்காளர்களின் நம்பிக்கையை தக்கவைக்க உதவுகின்றது.

### நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்ளக்கூடிய வகையில் ஆளுகையை வலுப்படுத்தல்

**சமீபத்திய பொருளாதார நெருக்கடி இலங்கையின் நீண்டகால ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் கட்டமைப்பு தொடர்பிலான சிக்கல்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிர்வாகப் பலவீனங்களை சரிப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவைப்பாட்டை கட்டாயமாக்கியது.** சிக்கலான பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிக்கும் விதமாக, தொடர்பான அதிகாரிகள் பல முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களைச் செயற்படுத்தி, நாட்டை நிலையான மீட்சி பாதையில் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்ட குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினர். மீட்சி பாதையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இருந்த போதிலும், முற்றாக சரி செய்யப்பட வேண்டிய பல சவால்களை இன்னமும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இச் சவால்கள் சீரான அபிவிருத்தியை தாமதப்படுத்தவும் நீண்டகால வளர்ச்சியை பாதிக்கவும் கூடிய அதிக வாய்ப்புக்களுள்ளது. குறிப்பாக பரவலாகக் காணப்படும் ஆளுகை மற்றும் ஊழல் தொடர்பிலான கரிசனைகள் வரி சேகரிப்பு, முதலீடு மற்றும் கடன் வழங்கலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இப் பிரச்சினைகளை சீர்செய்ய வேண்டியதானது கடினமாக ஈட்டிய பொருளாதார முன்னேற்றங்களை பாதுகாப்பதற்கும் நீண்டகால அபிவிருத்தியை அடைவதற்கும் அத்தியாவசியமாக காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிக்கான பதிலிறுத்தலில் நல்லாளுகை ஒரு முக்கிய அங்கமாகியுள்ளது. நல்லாளுகை தொடர்பான குறைபாடுகள், குறிப்பாக ஊழல் மற்றும் பலவீனமான நிறுவனங்களை சரிசெய்யாமல் இருந்தல் போன்றன, அடையப்பட்ட மீட்சியின் பலன்களை பலவீனமாகவும் குறுகிய காலத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாகவும் மாற்றிவிடும். இப் புரிதலின் அடிப்படையில், **2023 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் (IMF-EFF) ஆளுகை மற்றும் ஊழல் பற்றிய பிரச்சினையைத் தீர்த்தல் முக்கிய தூண்களில் ஒன்றாக உள்ளடக்கப்பட்டது.** இந் நிதிய வசதியின் கீழ் ஆளுகை மற்றும் ஊழல் பற்றிய பிரச்சினையைத் தீர்த்தல் தொடர்பில் நாடு பூர்த்திசெய்ய வேண்டிய முக்கிய கட்டமைப்புசார் இலக்குகளாக நிறுவனங்களின் சுயாதீனத்தையும் ஊழல் தடுப்பையும் உறுதி செய்யும் வகையிலான சட்டங்களை இயற்றுதல் மற்றும் இலங்கையின் ஊழலுக்கெதிரான கட்டமைப்பினை மதிப்பிடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவிக்குழுவினால் தலைமை தாங்கப்பட்ட இலங்கைக்கான ஆளுகை கண்டறிதல் அறிக்கையினை (SriLanka Governance Diagnostic) வெளியிடல் என்பன காணப்படுகின்றன. மேலும், இத் திட்டத்தின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் ஊழலை எதிர்த்தல், அரச துறையின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல், அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் வரி சேகரிப்பு மற்றும் செலவின முகாமைத்துவத்துக்கான டிஜிற்றல் மயமாக்கலை துரிதப்படுத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

### இலங்கைக்கான ஆளுகை கண்டறிதல் அறிக்கை: நிலைபேறான ஆளுகைக்கான அடித்தளம்

**ஆளுகை மற்றும் ஊழல் தொடர்பான சீர்திருத்தங்களில் ஓர் முக்கிய மைல்கல்லாக, ஆசியாவில் முதலாவது மதிப்பீடாக, இலங்கைக்கான ஆளுகை கண்டறிதல் அறிக்கை 2023 செப்டெம்பரில் வெளியிடப்பட்டது.** இந்த விரிவான அறிக்கை அரச அதிகாரிகள், குடியியல் சமூக பிரதிநிதிகள் மற்றும் பிற முக்கிய பங்குதாரர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு, நாட்டின் ஆளுகை தொடர்பான சவால்களை நுணுக்கமாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்தியது. ஊழல் அபாயங்கள் மற்றும் நிர்வாக பலவீனங்கள் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை அறிக்கை ஆராய்ந்தது. இதில் ஊழல், பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை எதிர்த்தல், பொது நிதியியல் முகாமைத்துவம் (நிதி முகாமைத்துவம், வரிக் கொள்கை மற்றும் அரசிறை நிர்வாகம், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் பொதுக் கொள்முதல் உள்ளடங்கலாக), மத்திய வங்கியின் ஆளுகை, நிதியியல் துறையின் மேற்பார்வை மற்றும் ஒப்பந்தங்களை அமுல்படுத்துதல் மற்றும் சொத்து உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இவ் அறிக்கை பல முக்கியமான அரச நிறுவனங்களின் சுயாதீனம் மற்றும் பொறுப்புக்கூறல் பாதிக்கப்பட்டிருப்பது, சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளில் காணப்படும் குறைபாடுகள், நிதியியல் ஒழுங்கின்மை மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றாக்குறை போன்ற அமைப்புசார்ந்த பலவீனங்களை வெளிக்கொணர்ந்தது. இவ்வகையான பலவீனங்கள் ஊழலுக்கான சாதகமான சூழலை உருவாக்கி அரசின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைவடையச் செய்யக்கூடியன. இதன் அடிப்படையில், இவ் அறிக்கை பின்வருவனவற்றை நோக்காகக் கொண்டு 16 முக்கிய பரிந்துரைகளை முன்மொழிந்தது.



பிரணவி யதுகுலன்,
சிரேஸ்ட பொருளியலாளர்,
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி.

- ♦ வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல்-பொது நிதியியல் முகாமைத்துவத்தில் அதிக கவனம் செலுத்தல்
- ♦ நலன் முரண்பாடுகளை குறைத்தல் (Conflict of Interest)
- ♦ நிறுவன மற்றும் தனிநபர் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தல்
- ♦ சட்டவாட்சியை மேம்படுத்தல் (Rule of Law)
- ♦ கொள்கைகள், நடைமுறைகள், வெளியீடுகள் மற்றும் எதிர்பார்ப்புகளை மேம்படுத்தல்

இதில் 10 பரிந்துரைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு திட்டத்தின் அடிப்படை இலக்குகளாக அமைக்கப்பட்டதோடு 4 பரிந்துரைகள் அரசாங்கத்தின் இறை நிகழ்ச்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டன.

### ஆளுகை தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள்

ஆளுகை தொடர்பிலான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை இலங்கை அடைந்துள்ளது. ஆளுகை தொடர்பில் ஓர் அரச செயற்றிட்டமொன்று தயாரிக்கப்பட்டு, அதன் வெளிப்படைத்தன்மை மற்றும் முன்னேற்றம் கண்காணிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு பிரசுரிக்கப்படுகின்றது.

(தொடர்ச்சி 15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: படித்தால் மட்டும் போதுமா
பாடியவர்: டி.எம்.எஸ்



அண்ணன் காட்டிய வழியம்மா – இது
அன்பால் விளைந்த பழியம்மா
கண்ணை இமையே கெடுத்ததம்மா – என்
கையே என்னை அடித்ததம்மா
அண்ணன் காட்டிய வழியம்மா

தொட்டால் சுடுவது நெருப்பாகும்
தொடாமல் சுடுவது சிரிப்பாகும்
தெரிந்தே கெடுப்பது பகையாகும்
தெரியாமல் கெடுப்பது உறவாகும்
அண்ணன் காட்டிய வழியம்மா

அடைக்கலம் என்றே நினைத்திருந்தேன்
அணைத்தவனே நெஞ்சை எரித்துவிட்டான்
கொடுத்தருள்வாய் என்று வேண்டி நின்றேன்
கும்பிட்ட கைகளை முறித்து விட்டான்
அண்ணன் காட்டிய வழியம்மா

அவனை நினைத்தே நானிருந்தேன் – அவன்
தன்னை நினைத்தே வாழ்ந்திருந்தான்
இன்னும் அவனை மறக்கவில்லை – அவன்
இத்தனை செய்தும் நான் வெறுக்கவில்லை
அண்ணன் காட்டிய வழியம்மா – இது
அன்பால் விளைந்த பழியம்மா
கண்ணை இமையே கெடுத்ததம்மா என்
கையே என்னை அடித்ததம்மா

(14 ஆம் பக்க தொடர்ச்சி...)

ஆளுகை மற்றும் ஊழல் தொடர்பிலான சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் பல முக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் **இலங்கை மத்திய வங்கிச் சட்டம், பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டம் மற்றும் ஊழல் ஒழிப்புச் சட்டம் போன்றவை அண்மையில் இயற்றப்பட்ட மிக முக்கியமான சட்டங்களாகக் காணப்படுகின்றன.** இவை சட்டக் கட்டமைப்புகளை வலுப்படுத்தி ஊழல் ஒழிப்பையும் நல்லாளுகையையும் மேம்படுத்துகின்றன. ஆளுகையை மேம்படுத்துவதில் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக புதிய மத்திய வங்கி சட்ட அமுல்படுத்துதலை கூறலாம். இச் சட்டம் மத்திய வங்கியின் சுயாதீனத்தை மேம்படுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரித்தல், தொடர்ச்சியாக விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான நாணயக் கொள்கை கட்டமைப்பை மீளவலுப்படுத்தல், மற்றும் இவற்றினூடாக ஆளுகைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலானதுமான விசேட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. மேலும் அரசியல் அழுத்தங்களிலிருந்து மத்திய வங்கியை பாதுகாக்கும் அதேவேளை மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் இடையேயான இணக்கமான ஒருங்கிணைப்பின் மூலம் நம்பகத்தன்மையும் பொறுப்புக்கூறலும் உறுதிப்படுத்தப்படுகிறது.

செயற்றிறன் மற்றும் சுயாதீனத்தை மேம்படுத்துதல் தொடர்பான தற்போதைய முன்னெடுப்புக்கள் பல அரச நிறுவனங்களின் நல்லாளுகை மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கின்றன. **2023 ஆம் ஆண்டின் புதிய ஊழல் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் செயற்படும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) சுயாதீனம் அதிகரிக்கப்பட்டு நம்பகத்தன்மையும் செயற்றிறனும் வாய்ந்த அமைப்பாக நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.** ஆணையத்தின் தொழிற்பாடுகள் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதோடு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல், தனியார் துறை ஊழல், விளையாட்டுத் துறையிலுள்ள ஆளுகை மற்றும் ஊழல் குற்றங்கள், வெளிநாட்டு அதிகாரிகளுடன் தொடர்புடைய ஊழல், வர்த்தகத்தில் ஊழலின் பாதிப்பு மற்றும் நலன் முரண்பாடுகள் போன்றவற்றினை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆணையத்தின் செயற்றிறனை அதிகரிக்க புதிய பணியாளர்கள் உள்வாங்கப்பட்டு, சொத்து விபரங்கள் வெளிப்படுத்துகை முகாமைத்துவ அலகு மற்றும் பணம் தூயதாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் அலகு போன்ற சிறப்பு அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், தேசிய செயற்றிட்டமொன்றின் மூலம் புதிய சட்டத்தின் ஏற்பாடுகளின் விரைவான அமுல்படுத்தல் மேற்கொள்ளப்படுவதோடு ஆணையத்தின் செயற்பாடுகள் டிஜிற்றல் முறைக்கு மாற்றப்படுகின்றன.

மேலும், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் வகையில் கொள்முதல் போட்டியாளர்களின் பெயர்கள் வெளியிடப்படுதல், வரிவிலக்கு மதிப்புகள் வெளிப்படுத்தப்படுதல் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளின் சொத்து விபரங்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படல் போன்ற நடவடிக்கைகளும் அமுலாக்கத்திலுள்ளன. இத்தகைய முயற்சிகள் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறும்தன்மையை வலுப்படுத்தி நம்பிக்கையை மீண்டும் நிறுவுவதற்கு அவசியமானவையாக காணப்படுகின்றன. இச் சீர்திருத்தங்கள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு ஆளுகை மற்றும் பொருளாதார நிலைத்தன்மை இடையேயான தொடர்பை வலுவாக உணர்த்துகின்றன.

### ஆளுகை தொடர்பிலான சவால்கள் மற்றும் நிலையான நடைமுறைப்படுத்தலுக்கான தேவைப்பாடுகள்


ஆளுகை மற்றும் ஊழல் தொடர்பான சீர்திருத்தங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் காணப்பட்டபோதிலும் சீர்திருத்தப் பாதையில் சில சவால்கள் காணப்படுகின்றன. **நடைமுறையிலுள்ள சீர்திருத்தங்களை முழுமையாக நிறைவேற்றுவதற்கு ஆளுகை கட்டமைப்பானது அனைத்தையுமுள்ளடக்கியதாகவும் வலுவானதுமாகவும் இருத்தல் அவசியம்.** சீர்திருத்தத்திற்கான ஒரு பரந்த கூட்டணியை உருவாக்குவது முன்னேற்றத்தை தக்கவைக்கவும் முன்னேற்றத்தை தடுக்கும் வகையிலான செயற்பாடுகளை சமாளிக்கவும் அவசியமானதாகும். இந்த கூட்டணியில், தெளிவான பணிமுறைகள் மற்றும் நோக்கங்களுடன் செயற்படும் திறமையான அரசாங்க நிறுவனங்கள் மட்டுமின்றி மேம்படுத்தப்பட்ட ஆளுகையினூடாக நிதியியல் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை எளிதில் அணுகி பயனடையக்கூடிய தனியார் துறையும் அடங்கும். மேலும், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பன்னாட்டு பங்குதாரர்கள் ஆதரவு மற்றும் கண்காணிப்பு வழங்குவதில் தொடர்ந்தும் பங்காற்றுதல் அவசியமானதாகும். **மேலும், திறந்த பொதுக் கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் பொதுமக்களின் கருத்துக்கள் கொள்கை முடிவுகளில் பிரதிபலிக்கப்பட வேண்டும், இவை ஆளுகை சீர்திருத்தங்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் ஆதரவை பெறுவதற்கு அவசியமானதாகும்.** அத்துடன், சீர்திருத்தங்கள் மேற்தட்டு மக்களின் நலன்களை மட்டுமன்றி மோசமான ஆளுகை மற்றும் பொருளாதார சமமின்மை மூலம் அதிகம் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதையும் சமத்துவமான வள ஒதுக்கீட்டையும் உறுதிப்படுத்துதோடு அவர்களுக்கான சமூகப்பாதுகாப்பு நிச்சயப்படுத்தப்படுவதும் அவசியமாகும்.

அரச நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்தி ஆளுகையை வலுப்படுத்துவது சீர்திருத்த திட்டத்தின் அடிப்படை அம்சங்களிலொன்றாகும். இலங்கைச் சுங்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற இறைத்துறையுடன் தொடர்புடைய முக்கிய நிறுவனங்களில் கிரமமான செயலாற்ற மீளாய்வுகள் மற்றும் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்ட கோப்பு முறைகள் போன்றவற்றின் முழுமையான விரைவான அமுலாக்கங்கள் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கும், ஊழல் மற்றும் மனித தலையீட்டை குறைப்பதற்கும் தேவையானவையாகும். இதுபோன்ற நிறுவனசார் முன்னேற்றங்கள் சட்டவாட்சியை வலுப்படுத்தவும் பொறுப்புக்கூறலுக்கும் கொண்டுள்ள தெளிவான அர்ப்பணிப்பை காட்டுகின்றன. எனினும், போதுமான வளங்களின் கிடைப்பனவு, தேவையற்ற அரசியல் தலையீடுகள் மற்றும் தொடர்ச்சியான வெளிப்படைத் தன்மையை பேணுவதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுதல் போன்ற சவால்களுக்கு தொடர்ந்து முகங்கொடுக்க வேண்டியுள்ளன. ஆகையால் இறை முகாமைத்துவம், பொதுக் கடன் முகாமைத்துவம் மற்றும் வங்கி ஒழுங்குமுறை தொடர்பான அரசின் நடவடிக்கைகள் விதிமுறைகளுக்கு ஏற்பவும் பொருளாதார நியதிகளுடன் இணங்கி இருப்பதும் உறுதி செய்யப்படல் வேண்டும். அரசியல் தொடர்புள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்புரிமைகளை கட்டுப்படுத்தி சமமான போட்டி சூழலை உருவாக்குவதோடு, வளங்களின் முறையற்ற பயன்பாடு தடுக்கப்படல் வேண்டும். இத்தகைய மாற்றங்கள் நிலைபேறான பொருளாதார சூழலை உருவாக்கவும் நாட்டின் வளங்களை பொறுப்புடன் நிர்வகிக்கவும் அத்தியாவசியமானவை.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் ஆளுகை சவால்களை சமாளிப்பதில் நல்லாளுகை மற்றும் பொறுப்புக்கூறல் அடிப்படைக் கூறுகளாக கருதப்படுகின்றன. ஊழல் ஒழிப்பு மற்றும் அமைப்புச் சீர்திருத்தங்கள் நாட்டின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதோடு, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகையால் இலங்கையின் ஆளுகை சீர்திருத்தங்கள் எதிர்காலத்தில் முழுமையாக திட்டமிட்டு செயற்படுத்தப்பட வேண்டும். **இதற்காக, அரசாங்க நிறுவனங்களின் சுயாதீனத்தையும் திறனையும் வலுப்படுத்துவதோடு வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுமக்கள் மற்றும் தனியார் துறையின் பங்கேற்பை மேம்படுத்தி, ஊழல், வளச் சுரண்டல் மற்றும் செயற்றிறனற்ற நிர்வாகம் போன்ற மறைமுகமான சவால்களை தீர்க்க வேண்டும்.** இவ்வாறான நிலையான தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் நிலைபேறான வளர்ச்சியை உறுதி செய்யவும் பொதுமக்கள் சர்வதேச முதலீட்டாளர்கள் மற்றும் நிதிசார் நிறுவனங்களின் நம்பகத்தன்மையை தக்கவைத்துக்கொள்ளவும் அவசியமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்





நாய்க்குட்டிகள் விற்பனைக்கு என்று எழுதிய பலகையைத் தனது கடைக்கதவுக்கு மேல் மாட்டிக்கொண்டிருந்தார் அதன் உரிமையாளர்.

அந்தப் பலகை குழந்தைகளை ஈர்க்கும் என்று நினைத்தார் அவர். அதன்படியே ஒரு சிறுவன், கடையின் முன் வந்து நின்றான். "நாய்க்குட்டிகளை நீங்கள் என்ன விலைக்கு விற்கப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாய் வரை என்று கடைக்காரர் பதில் சொன்னார். நான் நாய்க்குட்டிகளைப் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

கடை உரிமையாளர் புன்னகைத்து, உள்ளே திரும்பி விசிலடித்தார். நாய்க் கூண்டிலிருந்து பந்துகளைப் போல ஐந்து குட்டி நாய்க்குட்டிகள் ஓடி வந்தன.

ஒரு குட்டி மட்டும் மிகவும் பின்தங்கி மெதுவாக வந்தது. பின் தங்கி, நொண்டி நொண்டி வந்த அந்தக் குட்டியை உடனே கவனித்த சிறுவன், "என்னாச்சு அதுக்கு?" என்று கேட்டான்.

அந்தக் குட்டி நாயைப் பரிசோதித்த கால்நடை மருத்துவர், அதற்குப் பிற்பகுதி சரியாக வளர்ச்சியடையவில்லை.

எனவே எப்போதும் முடமாகத் தான் இருக்கும் என்று கூறிவிட்டதாக விளக்கினார் கடைக்காரர்.

சிறுவனின் முகத்தில் ஆர்வம். "இந்தக் குட்டிதான் எனக்கு வேணும்" என்றான்.

"அப்படி என்றால் நீ அதுக்குக் காசு கொடுக்க வேண்டாம். நான் அதை உனக்கு இலவசமாகவே தருகிறேன்"என்றார் கடைக்காரர்.

அந்தக் குட்டிப் பையனின் முகத்தில் இப்போது சிறு வருத்தம்.

கடைக்காரரின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்து விரல் நீட்டிச் சொன்னான். "நீங்க ஒன்றும் எனக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டாம்." மற்றைய நாய்க்குட்டிகளைப் போலவே இதுவும் விலை கொடுத்து வாங்கத் தகுதியானதுதான். நான் இந்தக் குட்டிக்கு உரிய முழுத்தொகையையும் கொடுக்கிறேன்.

ஆனால் இப்போது என்னிடம் குறைவான பணம்தான் இருக்கிறது. பாக்கித் தொகையை மாதா மாதம் கொடுத்துக் கழித்து விடுகின்றேன்" என்றான்.

ஆனாலும் கடைக்காரர் விடவில்லை. "பையா... இந்த நாய்க்குட்டியால் உனக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. இதனால் மற்றைய நாய்க்குட்டிகளைப் போல ஓட முடியாது, குதிக்க முடியாது, உன்னோடு விளையாட முடியாது." என்றார்

உடனே, அந்தப் பையன் குனிந்து தனது இடதுபக்க காற்சட்டையை உயர்த்தினான். வளைந்து முடமாகிப் போயிருந்த அக்காலில் ஓர் உலோகப்பட்டை மாட்டப்பட்டிருந்தது.

இப்போது அவன் கடைக்காரரை நிமிர்ந்து பார்த்துச் சொன்னான்,

"என்னாலும்தான் ஓட முடியாது... குதிக்க முடியாது. இந்தக்குட்டி நாயின் கஷ்டத்தைப் புரிந்துகொள்பவர்கள்தான் இதுக்குத் தேவை!" என்றான்.

உன் வலியை உன்னால் உணர முடிந்தால் நீ உயிரோடு இருக்கிறாய்.

ஆனால் பிறர் வலியை உன்னால் உணர முடிந்தால் நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய்.!

# கவிதைக் கலசம்



## இனி மாறாத வரையில்...

நான் ஒரு நல்ல பிள்ளை
நாற்பது வயதுக்கு மேலாகிறது
பீடி கஞ்சா புகைப்பது இல்லை
ஐஸ் குஷ் கண்டது இல்லை
போத்தல் பானங்கள் குடிப்பது இல்லை
கடைச் சாப்பாடு உண்டது இல்லை
சுற்றுலா சினிமா செல்வது இல்லை
வீட்டுக்குள்ளேதான் குடியிருப்பு
சொந்த வயலில் நெல் விளைவித்து
வீட்டுத்தோட்டத்தில் காய்கறி பறித்து
விறகு அடுப்பில் மண்சட்டி வைத்து
வீட்டுச் சமையல் நாளும் தப்பாது
என்பெருமை வீட்டின் பெருமை
எடுத்துச் சொல்லியே திருமணத் தரகர்
எங்கும் எனக்கு பெண் தேடினார்
தரகர் வந்தார் தன்னிலை விளக்கினார்
"வீட்டுக்குள்ளே அடைந்து கிடக்கவோ
ஓய்வு இல்லாது உடம்பை வருத்தவோ
நாள் முழுவதும் சமைத்துக் கொட்டவோ
எந்தப் பெண்ணும் இன்று இல்லை
நல்ல பிள்ளை இனி மாறாத வரையில்
கடைச் சாப்பாடு வீடு வரும் வரையில்
கானல் நீர்தான் திருமணம்" என்றார் அவர்

பிரமன்
கொக்குவில் மேற்கு

## புதைகுழி சாட்சியம்



ஈரைந்து மாதங்கள்
கலையாது கருச்சுமந்தவள்
கந்தல் துணியை மட்டும் வைத்து
எப்படி சாட்சியம் அளிப்பாள்
சிறுமுள்ளுக் குத்தினாலும்
சிதைந்து அழும் அவள் மனம்
சிதறிய எலும்பை வைத்து
எப்படி சாட்சியம் அளிப்பாள்
அந்தப்போர்க் காலம்
பங்கருக்குள் அடைகாத்தவள்
புதைகுழிக்குள் புதையுண்டவனை
எப்படி சாட்சியம் அளிப்பாள்
உதிரத்தை பாலக்கி
உணவளித்த தன் பிள்ளையை
மரணவனுவில் சான்றாக்க
மனம் வந்து எப்படி சாட்சியமளிப்பாள்
கடும் பஞ்சம் வந்தபோது கூட கஞ்சியும்
கருவாடும் குடுத்து வளர்த்த உடம்பது
கைபிடி சாம்பல் கூட இல்லை மனம் வெந்து
எப்படி சாட்சியமளிப்பாள்
சர்வதேசமே வந்து சாட்சியமளித்தாலும்
அந்த பேதைத்தாய் மனம்
ஏனோ ஏற்க மறுக்கிறது
போய் வருகிறேன் என்று போனவனை
எண்ணிக் காத்திருக்கிறது
அவள் வீட்டு அடையா நெடுங்கதவும்

கஜானி கஜரூபன்
வராகி அம்மன் கோவிலடி, கொக்குவில்.

## தமிழ்



மனிதகுல வரலாற்றின் பொக்கிஷம்
பலகோடி மக்களின் வழிகாட்டி
அகிலத்தின் முதன் மொழி
தமிழ் குழந்தைகளின் முதற் சுவாசம்
இம்மையிலும், மறுமையிலும்
என் சுவாசம் என்னை
அழகனாக்கிய ஆக்க மொழி
மங்கா புகழ் கொண்ட நிறை மொழி
மரண பயமற்ற மானிட மொழி
தமிழ் உணர்வாளர்களின்
இதய மொழி
வேற்று மொழியாளர்களையும்
கவரும் கவின் மொழி
அறிவியல் வரம்புக்குள்
அடங்கா வளர் மொழி
எண்ணற்ற பெருமைகளின்
ஏந்திளையாள் எம் தமிழே!

அழகன் (வரதன்)
நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி னி மா

# சின்னத்திரை டைரி

## மணிமேகலை

**பிடித்த இடங்கள்:** கோவை, சென்னை மற்றும் சில தமிழக கிராமங்களும் பிடிக்கும். கோயம்புத்தூர் பிறந்த இடம். பிறந்த ஊர் யாருக்காவது பிடிக்காமல் போகுமா? மணிமேகலையை நாலு பேருக்கு அடையாளம் காட்டிய இடம் சென்னை என்பதால், அதுவும் பிடிக்கும். மூன்றாவது, கிராமம் என்றால் எனக்கு ரொம்பவே பிடிக்கும். காரணம், அமைதியான சூழல், ஆரோக்கியமான காற்று, அங்கு இருக்கின்ற எளிய மனிதர்கள் தான். வீடியோ போடுவதற்காக நான் பயணித்த சில கிராமங்களின் நினைவுகள் எப்பவும் என் மனதை விட்டு அகலாது.



**பிடித்த தத்துவம்:** "உலகமே எதிர்த்தாலும் உன்னை நம்பு," ஜெயிக்கலாம்." இதற்கு முன்னால் யாரும் இதைச் சொல்லியிருக்கிறார் களா தெரியவில்லை. ஆனால் இப்போது நான் அடிக்கடி எனக்குள் சொல்லிக் கொள்வது இதுதான்.


**சமீபத்திய மகிழ்ச்சி:** சிறந்த தொகுப்பாளர் என்ற விருது கிடைத்ததைச் சொல்வேன்.

**அடிக்கடி சர்ச்சை ஏன்?:** நானே விரும்பி சர்ச்சையில் சிக்குகின்ற மாதிரி சொல்கிறீர்கள்! நான் காரணமா இருந்ததில்லை. அதுவா நடக்குது, அதே நேரம் நல்ல அனுபவம் தருகிறது!

**சினிமா:** அந்த ஆசை இல்லை.



எஸ்.ஜே.சூர்யா தான் இயக்கும் "கில்லர்" படத்தின் வேலைகளில் பிசியாக இருக்கிறார். படம் மிகச்சிறப்பாக வந்திருப்பதாகப் பேசப்படுகிறது. அதிக வருடங்களாக ஊறியிருந்த ஸ்கிரிப்ட் என்பதால் படப்பிடிப்பை வேகமாக நடத்துகிறார். சில பாடல் காட்சிகளே பாக்கி என்பதுதான் தற்போதைய நிலவரம். இதற்காக நான்கு மாதங்களாக வெளிப்படங்களின் நடிப்புக்கு விடுமுறை விட்டிருக்கிறார் எஸ்.ஜே.சூர்யா.



விக்ரம் நடிப்பில், தான் இயக்கவிருக்கும் அடுத்த படத்திற்கான ஸ்கிரிப்ட்டுடன் தயாராகிவிட்டார் "மெய்யழகன்" டைரக்டர் பிரேம்குமார். இதற்கு முன்னதாக, "96" படத்தின் இரண்டாம் பாகத்தை அவர் இயக்குவதாகத் திட்டமிருந்தது. அதற்குள் விஜய்சேதுபதி, தெலுங்கில் பூரி ஜெகந்நாத் படத்துக்குச் சென்றுவிட்டதால், "96" தள்ளிப் போய்விட்டது. விக்ரம் நடிக்கும் படத்தைத் தொடர்ந்து... "மெய்யழகன்", "96" இரண்டு படங்களையும் ஹிந்தியில் ரீமேக் செய்யும் உத்தேசமும் இருக்கிறது பிரேம்குமாருக்கு.



"ரெட்ரோ"வுக்குப் பின் தனது ஸ்டோன் பெஞ்ச் சார்பில் சில படங்களைத் தயாரித்து வருகிறார் கார்த்திக் சுப்பராஜ். ஓ.டி.டிக்கான வெப்சீரீஸ் ஒன்றையும், ரத்னகுமாரின் இயக்கத்தில் "மேயாத மான்" என்னும் படம் ஒன்றையும் தயாரிக்கிறார். வெப்சீரிஸில் மாதவன், ஸ்வாஸ்விகா என பெரிய நட்சத்திரப் பட்டாளமே உள்ளது. அதைப் போல ரத்னகுமார் இயக்கும் படத்தில் "ரெட்ரோ" வில்லன் விதுவை ஹீரோவாக அறிமுகப்படுத்துகின்றனர். அந்தொருவன் வந்திருக்கான்டே!



மாரி செல்வராஜின் "பைசன்" படத்தில் மட்டும் கவனம் செலுத்தி வந்த துருவ் விக்ரம், அது முடிந்த பிறகு அடுத்தடுத்து மூன்று படங்களின் கதைகளைக் கேட்டு ஓகே சொல்லியிருக்கிறார். துருவ், தன்னுடைய உடல் அமைப்பில் பெரும் மாற்றங்களையெல்லாம் செய்திருந்தார், "பைசன்" படத்திற்காக. அதனால்தான், மற்ற படங்களில் நடிக்க இயலாமல் போனது. இப்போது பழைய தோற்றத்திற்குத் திரும்பிவிட்டார் என்கிறார்கள். மணிரத்னம் படத்தில் துருவ் நடிப்பதாக முன்பு பேசப்பட்டது. அநேகமாக அதற்கான படப்பிடிப்புத் தொடங்கக்கூடும் என்கிற பேச்சும் இருக்கிறது.



முதன்முறையாக தெலுங்கில் அடியெடுத்து வைத்திருக்கிறார் யோகிபாபு. அங்கே காமெடி ஜாம்பவானான பிரம்மானந்தத்துடன் இணைந்து நடிக்கிறார். யோகிபாபு, தன் நட்பு வளையத்துக்குள் வந்துவிட்டதால், தன் வீட்டுக்கு அழைத்து விருந்து வைத்துள்ளார் பிரம்மானந்தம். அப்போது, "நான் பிரம்மானந்தம்" என்ற தன் சுயசரிதை புத்தகத்தை யோகிபாபுவுக்கு நினைவுப் பரிசாகவும் கொடுத்து மகிழ்ந்துள்ளார்.



தனுஷிற்கான ஸ்கிரிப்ட்டை ரெடி செய்யும் வேலைகளில் மும்முரமாக இறங்கிவிட்டார் "லப்பர் பந்து" தமிழரசன் பச்சமுத்து. கதை முழுவதையும் தனுஷிற்குச் சொல்லிவிட்டார். தனுஷின் ரசிகர்களுக்கும், பொதுவானவர்களுக்கும் பிடித்தமான ஒரு படமாகக் கொண்டுவரத் திட்டமிடுகிறார்கள். "லப்பர் பந்தை"விட சிறப்பானதாக இருக்கும் எனப் பேச்சு இருக்கிறது. கார்க் பந்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

459

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# முழு ஆடைப்பால் ஆரோக்கியமானதா?

பாலும், பாலினால் செய்யப்பட்ட பாற்பொருட்களும் எமது உணவில் அன்று முதல் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இன்றைக்கு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன், பிற விலங்குகளிலிருந்து பெறப்பட்ட பாலை பயன்படுத்தி வந்துள்ளான். கி.மு. 8000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆடு, மாடு போன்ற விலங்குகளில் இருந்து கிடைக்கும் பாலை, மனிதன் பயன்படுத்தி வந்துள்ளதாக ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. பால் ஒரு நிறையுணவு ஆகும். பாலில், கனிப்பொருட்கள், விற்றமின்கள், புரதம், கொழுப்பு, காபோவைதரேற்று போன்ற பல அத்தியாவசியமான ஊட்டச்சத்துகள் அடங்கியுள்ளன. எனவே, வளரும் பிள்ளைகளுக்கு பால் ஒரு அத்தியாவசியமான உணவாகும். ஆனால், பால் அருந்துவது பற்றி எம் மத்தியில் பல சந்தேகங்கள் காணப்படுகின்றன. பால் அருந்துவதால் சளி ஏற்படும், ஆஸ்துமா நோய் தீவிரமாகும். பால் வயதானவர்களுக்கு நல்லதா, குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸ்திரோல், ஈரலிலே கொழுப்பு படிவு போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு பால் ஆரோக்கியமானதா, எந்த விலங்கின் பால் ஆரோக்கியமானது, தற்போது விற்பனைக்கு வந்துள்ள கொழுப்பு குறைக்கப்பட்ட Non fat பால்மா உடலுக்கு நல்லதா அல்லது முழு ஆடைப்பால்மா நல்லதா போன்ற பல சந்தேகங்கள் நம் மத்தியில் நிலவுகின்றன. இது குறித்து தெளிவாக பார்ப்போம்.

ஒரு கோப்பை பால், அதாவது 240 ml பாலில் கிட்டத்தட்ட 3.25 வீதமான கொழுப்பு உள்ளது. அதில் கிட்டத்தட்ட 8g கொழுப்பு காணப்படுகிறது. இதைவிடப் பாலில் 159 கலோரி சத்து, 88% நீர், 7.7g புரதம், 11.7g காபோவைதரேற்று, 12.3g லக்டோசு எனும் வெல்லம் என்பன காணப்படுகின்றன. இவற்றை விட 276mg கல்சியம், 322mg பொற்றாசியம், 344mg பொசுபரசு என்பன காணப்படுகின்றன. பாலில் நார்ச்சத்து இல்லை. பாலில் இரண்டு வகையான புரதங்கள் காணப்படுகின்றன. பாலில் Casein எனப்படும் கரையாத புரதம் 80% அளவிலும், Whey protein எனும் கரையும் புரதம் 20% அளவிலும் காணப்படுகின்றன. இவ்விரு புரதங்களும் எமக்குத் தேவையான அத்தியாவசியமான அமினோ அமிலங்களைக் கொண்ட உயர்தர புரதங்களாகும். இதில் Casein என்ற புரதம், கல்சியம், பொசுபரசு போன்ற கனிப்பொருட்களை உறிஞ்சுவதற்கு அத்தியாவசியமானதுடன் இது உயர் குருதி அமுக்கத்தைக் குறைப்பதற்கும் உதவுகிறது. Whey protein ஆனது நீரிழிவைக் கட்டுப்படுத்த உதவுவதுடன் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் உதவுகிறது. இதைவிட, தசை வளர்ச்சிக்கும் அது முக்கியமான பங்கு வகிக்கின்றது. இந்த Whey protein குருதி அமுக்கத்தை குறைப்பதற்கும் உதவுகிறது.

பாலில் அதிகளவு கொழுப்பு காணப்படுகிறது. நிரம்பாத கொழுப்பமிலங்களில், mono unsaturated fat 28% உம், poly unsaturated fat 2.3% உம் காணப்படுகின்றன. 70% அளவில் நிரம்பிய கொழுப்பமிலங்கள் காணப்படுகின்றன. இதைவிட பாலில் மட்டும் தனித்துவமாக காணப்படும் லக்டோசு எனும் வெல்லமும் அதிகளவில் காணப்படுகிறது. இந்த வெல்லம் சமிபாட்டடைவதற்கு லக்டேசு எனும் நொதியம் நம் குடலில் காணப்படுவது அவசியமாகும். துரதிஷ்டவசமாக, ஆசிய நாட்டவர்களுக்கு இந்த லக்டேசு நொதியம் குறைவாக காணப்படுகின்றது. ஆகையால், இவர்கள் அதிகளவான பாலை tolerate பண்ண மாட்டார்கள். இதை Lactose Intolerance என்று கூறுவார்கள். இந்நிலையில், பால் குடித்து 30 நிமிடத்திலிருந்து 2 மணித் தியாலத்திற்குள் வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுளைவு, வயிறு ஊதல், வாயு வெளியேறுதல் போன்ற பல அறிகுறிகளை இந்நோயாளிகள் கொண்டிருப்பார்கள்.



ஆகவே, இவர்கள் பாலை அதிகமாக பயன்படுத்தாமல், குறைவாக பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லது பாலிற்கு பதிலீடாக சோயா பால் போன்ற பால் வகைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பாலில் பல்வேறுபட்ட விற்றமின்களும் கனிப்பொருட்களும் காணப்படுகின்றன. குறிப்பாக பாலில், B12 என்ற விற்றமின் நிறைந்துள்ளது. இது மிகவும் சிறந்த விற்றமின் ஆகும். இது தாவர உணவுகளில் காணப்படாது. இதனால், தாவர உணவை உண்பவர்களுக்கு இந்த விற்றமின் பற்றாக்குறை ஏற்படலாம். எனவே, அவர்களுக்கு பாலில் உள்ள விற்றமின் B12 ஒரு மாற்றீடாக அமைகிறது. ஆகையால், தாவர உணவு உண்பவர்கள் கட்டாயமாக பாலை அருந்த வேண்டும்.

இதைவிட கல்சியம், விற்றமின் D என்பன பாலில் செறிந்து காணப்படுகின்றன. இவை எலும்பு, பல் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானவை. எலும்பில் ஏற்படக்கூடிய Osteoporosis எனும் நோயை எதிர்த்து போராடுவதற்கும், எலும்பு முறிவுகள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கும் இவை உதவுகின்றன. எனவே, மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்ட பெண்கள் பாலைக் கட்டாயமாக அருந்த வேண்டும். பாலில் காணப்படும் கல்சியம், பொற்றாசியம், மக்னீசியம் போன்ற கனிப்பொருட்களும் Casein, whey போன்ற புரதங்களும் உயர் குருதி அமுக்கத்தைக் குறைத்து, குருதி அமுக்கத்தை சீராக வைத்திருக்க உதவுகின்றன. எனவே, உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் பாலை அருந்திக் கொள்ளலாம்.

பாலில், Antioxidants எனப்படும் Zinc, Selenium, Beta carotene போன்ற பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இவை, இருதய நோய்களுக்கு எதிராகவும் புற்றுநோய்களுக்கு எதிராகவும் தொழிற்படுகின்றன. இதைவிட, பாலை அருந்துவதால் உடல் நிறையை குறைத்துக்கொள்ள முடியும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. 16 ஆய்வுகள் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டன. இதில் 11 ஆய்வுகள், முழு ஆடைப்பால் உடல் நிறையை குறைப்பதாகத் தெரிவிக்கின்றன. எனவே, உடல் நிறையை குறைக்க விரும்புவோர் பாலை அருந்துவது சிறந்தது. அடுத்ததாக பாலானது, Type 2 Diabetes எனப்படும் இரண்டாம் வகை நீரிழிவை குறைப்பதற்கு உதவுவதாகவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

முன்பு செய்யப்பட்ட சில பரிசோதனைகளின் போது, பாலில் காணப்படும் நிரம்பிய கொழுப்பு, உடலில் கொலஸ்திரோலின் அளவை அதிகரிக்கிறது எனவும் இதனால் இருதய நோய்கள் ஏற்படுகின்றன எனவும் முடிவெடுக்கப்பட்டது. இதனால், நிரம்பிய கொழுப்புகளைக் குறைவாக பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கு முரணாக, அண்மையில் செய்யப்பட்ட 21 ஆய்வுகளின் தொகுத்த முடிவாக, பாலில் உள்ள நிரம்பிய கொழுப்பு இருதய நோய்களைக் கூட்டுவதாக எந்த ஒரு ஆதாரமும் இல்லை என தெரிவிக்கின்றன. பாலில் உள்ள நிரம்பிய கொழுப்பு, உடலில் LDL கொலஸ்திரோலை அதிகரித்த போதிலும், அதற்கு சரிசமனாக HDL கொலஸ்திரோலையும் அதிகரிக்கின்றது. LDL எனும் bad cholesterol உம் HDL எனும் good cholesterol உம் ஒரே சீராக அதிகரிப்பதால், நிகர பாதிப்பு எதுவும் ஏற்படுவதில்லை.

இதைவிட, பால் அருந்துவதால் ஏற்படும் LDL கொலஸ்திரோலின் அதிகரிப்பானது, LDL இன் பெரிய மூலக்கூறுகளில் தான் ஏற்படுகிறது. இந்த பெரிய மூலக்கூறுகள் அவ்வளவு பாதிப்பானவை அல்ல. சிறிய Densed LDL மூலக்கூறுகள் தான் உண்மையில் பாதிப்பானவை. இந்த சிறிய மூலக்கூறுகள், பால் அருந்துவதால் குறைக்கப்படுகிறது. எனவே, ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது பாலில் உள்ள கொழுப்பு தீங்கானதல்ல. ஆகையால், கொலஸ்திரோல் மற்றும் இருதய நோய்கள் உள்ளவர்களும் முழு ஆடைப்பாலைச் சந்தேகமின்றி அருந்தலாம்.

ஒரு சிலருக்கு, பாலிற்கு ஒவ்வாமை தன்மை காணப்படலாம். அவ்வாறானவர்களுக்கு மூக்கடைப்பு, இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். இது எந்த உணவிற்கும் ஏற்படக்கூடிய பொதுவான ஒவ்வாமை ஆகும். அவ்வாறு ஒவ்வாமை உள்ளவர்கள் மட்டும் பாலைத் தவிர்ப்பது நல்லது. அவர்கள், சோயா பால் போன்ற மாற்றீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பசுப்பாலை விட ஆட்டுப்பால், எருமைப்பால் போன்ற பல பால் வகைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உண்மையில், எருமைப்பாலில் கொழுப்பு, புரதம் கலோரி என்பன அதிகமாக காணப்படுகின்றன. ஆட்டுப்பாலிலும் பசுப்பாலை விட அதிக கலோரியும் புரதமும் கொழுப்பும் காணப்படுகின்றன. இவையும் தீங்கற்றவை ஆகும். இவற்றை பயன்படுத்துவதால் உடலிற்கு எந்த பிரச்சினையும் ஏற்படாது. எனவே, நீங்கள் பாலை எந்த அச்சமும் இன்றி அருந்தலாம். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று கோப்பை பாலை நீங்கள் அருந்தலாம். பாலைக் காய்ச்சி அருந்துவது நல்லது. ஆடையை நீக்காமல் முழுப்பாலாக அருந்துவது சாலச்சிறந்தது. எனவே, நாம் அனைவரும் பாலை அருந்தி, அதன் பயன்களைப் பெறுவோம்.

**Dr. S. கேதீஸ்வரன்**
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ‘நீதியின் ஓலம்’

# கையெழுத்துப் போராட்டம் செம்மணியில் ஆரம்பம்!


(அராலி)

**ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து “நீதியின் ஓலம்” கையொப்பப் போராட்டம் நேற்று சனிக்கிழமை யாழ்.செம்மணியில் முன்னெடுக்கப்பட்டது.**

தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரலை வலியுறுத்தியே இந்த “நீதியின் ஓலம்” எனும், கையொப்பப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த போராட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் மாணவி கிருசாந்தி கொலை சம்பவத்துடன் தொடர்புடைய செம்மணி பகுதியில் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மரணித்த உறவுகளை நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு நினைவுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி குறித்த நிகழ்வு ஆரம்பமானது.




அதனைத் தொடர்ந்து கையெழுத்துப் பெறும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இப்போராட்டமானது தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்படும்.

இந்த கையொப்பப் போராட்டத்தினூடாக இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதிவிசாரணை வேண்டும் என்பதுடன் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும் எனவும் இந்தப் போராட்டம் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-33-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 200 | 350 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 200 | 140 | 150 |
| தக்காளி | 180 | 200 | 150 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 280 | 250 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 230 | 300 |
| கரட் | 400 | 450 | 500 | 400 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 60 | 80 |
| புடோல் | 120 | 100 | 150 | 80 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 250 | 230 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 180 | 300 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 400 | 180 | 250 |
| போஞ்சி | 700 | 700 | 400 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 250 | 160 | 150 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 150 | 40-80 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 150 | 150 | 300-400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 120-180 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 600 | 500 | 450 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 200 | 150 | 250 | 300 |
| முள்ளங்கி | 150 | 120 | 100 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 120 | 100 | 80 | 200 |

# குழந்தை ம.சண்முகலிங்கம் நினைவு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், செயல் திறன் அரங்க இயக்கம் இணைந்து நடத்தும் குழந்தை ம.சண்முகலிங்கம் நினைவு பன்னாட்டு பண்பாட்டு ஆய்வு மாநாடும் நாடக ஆற்றுகைகளும், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் வைத்தியர் பி.ஏ. டினேஸ் கூன்ஜே தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், தமிழ் அரங்கு மற்றும் கலைகளின் சமகால வெளிப்பாடுகள் என்ற தொனிப்பொருளில் மாநாடு நடைபெறவுள்ளது.

இதற்கு பிரதான சிறப்புரையை வழங்குவதற்காக உலகப்புகழ்பெற்ற தொடர்பியல் துறைப் பேராசிரியர் கோ.இரவீந்திரன் இந்தியாவிலிருந்து வருகை தருகிறார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

ஆய்வு மாநாடு நான்கு முக்கிய பகுதிகளாக நடைபெறவுள்ளது. காலை 9.00 -10.00 மணி வரை தொடக்க விழாவும் அரங்கத்திறப்புரையும் நடைபெறும்.

தொடர்ந்து 10.30 - 12.30 மணி வரை ஆய்வு அறிக்கைகளும் கலந்துரையாடல்களும் நடைபெறும்.

மாலை 2.00 - 3.30 மணி வரை குழுநிலைக் கலந்துரையாடல் ஈழத்தின் தமிழ் நாடகத்தின் எதிர்காலம் என்ற தலைப்பில் பேராசிரியர் சி. மௌனகுரு தலைமையில் நடைபெறவுள்ளது. (3-33)

# இராசிபலன்

**24.08.2025**
**ஆவணி 08, ஞாயிற்றுக்கிழமை**
**பிரதமை பிற்பகல் 12.29 மணிவரை**

**பூசம் பின்னிரவு 3.29 மணிவரை**
**சுப நேரம் 9.05-10.35 மணிவரை**
**இராகுகாலம் 4.35-6.05 மணிவரை**

**சித்தாமிர்தம்**
**சந்திராஷ்டமம்: திருவோணம்**

**வளவன்**

**மேஷம்**
பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்**
பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்**
உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், நண்பர்களால் நன்மையுண்டு.

**சிம்மம்**
வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், திடீர் பயணங்கள் கைகூடும், அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை கூடும்.

**விருச்சிகம்**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**கும்பம்**
குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், விட்டுச் சென்ற உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்**
வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்ட முற்படுவர்.

**கன்னி**
காரிய அலைச்சல்கள் சற்று அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு**
வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்**
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மதம் என்பதன் உட்பொருள் சத்தியமும் அகிம்சையும் தான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணைக்கைதிகளை விடுவிக்காவிட்டால்

# காசா நகரை அழிப்போம்!

## இஸ்ரேல் அமைச்சர் சூளுரை

**(காசா) ......................**

**ஹமாஸ் அமைப்பினர் ஆயுதங்களை போட்டுவிட்டு பிணைக் கைதிகளை விடுவிக்காவிட்டால் காசா நகரையே அழித்துவிடுவோம் என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.**



மேற்கு ஆசிய நாடான இஸ்ரேல் மீது 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர். 251 இற்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர். இதற்கு பதிலடியாக பாலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் போரை துவக்கியது. இதில் 62 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். தற்போது வரை 75 சதவீத காசா பகுதிகள் இஸ்ரேல் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன் காசாவை முழுமையாக கைப்பற்றும் திட்டத்துக்கு இஸ்ரேல் இராணுவ அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

இந்த போர் காரணமாக காசாவில் முதல்முறையாக பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா ஆதரவு பெற்ற உணவு பாதுகாப்பு அமைப்பு ஒன்று தகவல் தெரிவித்துள்ளது.

காசா மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பஞ்சம் நிலவி வருவதாகவும், அங்கு நிலைமை மோசமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளது. டெயின் அல் பலா மற்றும் கான் யூனிஸ் நகரிலும் வரும் செப்டம்பர் மாதத்துக்குள் பஞ்சம் ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளது. காசாவில் மட்டும் 5 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வறுமை, பட்டினி மற்றும் மரணம் என்ற அபாய நிலையில் உள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

காசா நகரில் வசிக்கும் குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு காணப்படுவதாக தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. 5 இல் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறைபாடால் அவதிப்பட்டு வருகின்றனர். கர்ப்பிணிகள் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும் தேவையான ஊட்டச்சத்து உணவு கிடைக்கவில்லை என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் கூறியதாவது, இஸ்ரேலின் நிபந்தனைப்படி ஹமாஸ் அமைப்பினர் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு, பிணைக்கைதிகளை விடுவிக்காவிட்டால், அவர்களுக்கு நரகத்தின் வாசல் திறக்கப்படும். அவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் ஹமாஸ் அமைப்பினரின் தலைநகரான காசாவை ஃரபா மற்றும் பெயின் ஹனூன் போல் மாற்றுவோம் என தெரிவித்தார். இந்த இரு நகரங்களும் இஸ்ரேல் தாக்குதலில் இடிபாடுகள் குவிந்த நகரமாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (நி)

## நயாகரா நீர்வீழ்ச்சிக்கு

# சுற்றுலா சென்ற பேருந்து கவிழ்ந்து விபத்து

**• ஐவர் உயிரிழப்பு • பலர் காயம்**



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மேற்கு நியூயோர்க்கில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் சிக்கி பலர் காயமடைந்துள்ளனர்.

நயாகரா நீர்வீழ்ச்சிக்கு சென்று விட்டு நியூயோர்க் நகருக்கு திரும்புகையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பேருந்து கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக நியூயோர்க் மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பேருந்தில் இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 54 சுற்றுலாப் பயணிகள் பயணித்துள்ளதாகக் கூறப்படுகிறது. விபத்தின் போது பல பயணிகள் பஸ்ஸிற்குள் இருந்து வெளியே தூக்கி வீசப்பட்டதாகவும், பலர் சீட்பெல்ட் அணிய வில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக ரொசெஸ்டர், பஃபலோ வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (நி)

# ரஷ்ய - உக்ரைன் போரை நிறுத்துவது கடினமாக உள்ளது

## ட்ரம்ப் பகிரங்கம்

(வோஷிங்டன்)

உலகில் 7 போர்களை நிறுத்திய எனக்கு, ரஷ்யா-உக்ரைன் விவகாரத்தை தீர்ப்பது கடினமாக உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

ரஷ்யா, உக்ரைன் போர் இன்னமும் ஓயவில்லை. இரு நாடுகள் இடையே போர் நிறுத்தத்தை எப்படியும் கொண்டு வந்துவிட வேண்டும் என்று முனைப்பு காட்டி வரும் ட்ரம்ப் பல கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினார். ஆனாலும் இரு நாடுகள் இடையே தீர்வு எட்டப்படவில்லை.


இந் நிலையில், உலகில் 7 போர்களை நிறுத்திய எனக்கு, ரஷ்யா-உக்ரைன் விவகாரத்தை தீர்ப்பது கடினமாக உள்ளது என அவர் கூறி உள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புடினும், ஜெலன்ஸ்கியும் இணைந்து செயற்படு வார்களா என்று நாங்கள் பார்த்து வருகிறோம். வெளிப் படையான காரணங்களுக்காக அவர்கள் நன்றாக பழகுவது இல்லை. இருவருடனும் நானும் இருக்க வேண்டுமா இல்லையா என்பது பின்னர் பார்ப்போம்.

இருவரும் (புடின் - ஜெலன்ஸ்கி) சந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் அவர்கள் தொடர்ந்து சண்டையிடுகிறார்கள். மக்களை கொல்கின்றனர். இது மிகவும் முட்டாள் தனமானது என அவர் தெரிவித்தார். (நி)

## அமெரிக்காவின் லூசியானாவில்

# எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் வெடிப்பு நச்சுப் புகையால் மக்கள் அவதி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திடீரென வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்த வெடிப்பு காரணமாக, ஆலையில் இருந்து கரும்புகை வெளியேறி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெடிப்பைத் தொடர்ந்து வெளியேறும் நச்சுப் புகை காரணமாக, அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மூச்சுத்திணறல் மற்றும் சுவாசக் கோளாறுகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நச்சுப்புகை அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கு வேகமாகப் பரவி வருவதால், மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு உள்ளூர் அதிகாரிகள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், நச்சுப்புகை பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும், ஆலையை அண்மித்துள்ள பிரதான நெடுஞ்சாலை மற்றும் அருகில் உள்ள பாடசாலைகள் உடனடியாக மூடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், நிலைமையைக் கட்டுப்படுத்த தீயணைப்பு மற்றும் அவசர மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வெடிப்புக்கான காரணம் மற்றும் சேத விவரங்கள் இதுவரை முழுமையாகத் தெரியவரவில்லை. இருப்பினும், மக்களின் பாதுகாப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் மண்டியிடுவது இல்லை. ~ அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையில் இருக்கக்கூடிய போக்கணம் கெட்ட அரசியல்

அரச நிதியைச் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவின் பொருட்டு, பிரித்தானியப் பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்கான பயணச் செலவை ஜனாதிபதி நிதியத்திலிருந்து செலவிட்டமையே ரணில் விக்கிரமசிங்க மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும்.

நாடு வங்குரோத்து நிலையில் இருந்த நேரத்தில், அரச நிதியைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சொந்தத் தேவைக்காக இலண்டன் சென்றதென்பது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

அதேசமயம் சட்டம் என்பது சகலருக்கும் பொதுவானது. தவிர, அரச சொத்தை துஷ்பிரயோகம் செய்வதென்பது மிக மோசமான குற்றச் செயல்.

எனவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதை எவரும் ஊதிப் பெருக்க வேண்டிய தேவையில்லை.

ஆம், இப்போது ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

சில வேளைகளில் குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பிலான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று, இறுதித் தீர்ப்பே முடிந்த முடிவாகும்.

சிலவேளைகளில் ரணில் விக்கிரமசிங்க குற்றமற்றவர் என்ற தீர்ப்புக் கூட வரலாம் அல்லது குற்றம் நிரூபிக்கப்பட்டுத் தண்டனைக்கும் ஆளாகலாம்.

எதுவாயினும் அஃது நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்தே அனைத்தும் அடங்கும்.

எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகள் அதிர்ந்து போயுள்ளனர்.

அதிலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்ற விசாரணை நடைபெறும்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு அருகில் அமர்ந்திருந்தமை நாடு முழுமையிலும் பேசுபடுபொருளாயிற்று.

ஆம், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார்.

நல்லாட்சி எனப் பெயரளவில் நடந்த அந்த அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவியைப் பறித்து, அதனை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கி இந்த நாட்டில் அரசியல் பித்தலாட்டம் செய்தவர் மைத்திரிபால சிறிசேன.

ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்ந்தும் பிரதமராக வைத்திருங்கள் என முக்கிய அரசியல் தலைவர்கள் மைத்திரியிடம் கோரிக்கை விடுத்தும் அதனைச் செய்ய மறுத்த அதே மைத்திரி, இப்போது ரணில் கைதாகப் போவதற்கு முன்னதாக, அவருக்கு அருகில் இருந்தார் என்னும்போது, மைத்திரியிடமும் குற்றப்புலனாய்வு விசாரணை நடத்தக்கூடிய வாய்ப்பு உண்டு என அனுமானிப்பதில் தவறில்லை.

எதுவாயினும் போக்கணம் கெட்ட அரசியலே இலங்கையில் உயிர்ப்புடன் உள்ளது எனக் கூறுவதில் எந்தத் தவறும் இல்லை.

# ரணில் மாத்திரம் அல்ல பலர் கைது செய்யப்படவுள்ளனர்

## கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

ரணில் மாத்திரமல்ல நாட்டில் இன்னும் பலர் கைது செய்யப்பட்வுள்ளனர் எனக் கடற்தொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையால் பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் நேற்று (23) யாழ். சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரசிங்க மாத்திரமல்ல இன்னும் பலர் உள்ளே செல்லக் கூடியவர்களாக இருக்கின்றனர். கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி இந்த நாடு வங்குரோத்து அடைந்த நாடு என அறிவிக்கப்பட்டது.

வங்குரோத்து என அறிவிக்கப்பட்ட நாட்டில் தங்களுடைய அப்பாவினுடைய சொத்து என நினைத்து மக்களுடைய பணமான 166 இலட்சத்தை வீணடித்துள்ளனர்.

சட்டவிரோதமாகப் பயன்படுத்தியுள்ளனர். அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

அதனுடைய விளைவாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றார்.

இதுவரை இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் உயரத்தில் இருப்பவர்கள், மேட்டுக்குடிகள் அவர்களிடையே நெருங்க முடியாது எனக் கூறப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க என்பவர் பெரிய நரியர், பெரிய தந்திரக்காரர், பெரிய மூளைசாலி, பலசாலி என்பது அவருக்குப் பின்னால் உலகமே இருக்கின்றது எனக் கூறி, ரணில் விக்கிரமசிங்க மீது கை வைக்க முடியாது என்றெல்லாம் கூறப்பட்டது.

ஆனால், நாங்கள் அவர் மீது கை வைக்கவில்லை. இந்த நாட்டிலுள்ள நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது.

இதுநாள் வரை நாட்டின் சட்டத்தை இந்த நாட்டிலுள்ள மேட்டுக்குடிகள் தங்களுடைய பைகளுக்குள் வைத்திருந்தனர். ஆனால் இன்று நீதித்துறை சுயாதீனமாக இயங்கக்கூடிய நிலைக்கு வந்துள்ளது.

நீதித் துறை சுயாதீனமாக இயங்குவதற்கான அனுமதி மற்றும் சுதந்திரத்தை வழங்கியுள்ளோம்.

அந்த சுயாதீன நீதிமன்றம், சுயாதீனமாக விசாரணை செய்து மக்களுடைய பணத்தை கொள்ளையடித்தது யாராக இருந்தாலும் அவர்களுடைய தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த நடவடிக்கையின் ஒன்றாகவே, முழு நாட்டில் இருக்கின்ற பழைய அரசியல்வாதிகள், நாட்டில் கொள்ளையடித்தவர்கள் என எல்லோரும் நடுங்குகின்ற அல்லது அச்சமடைகின்ற ஒரு கைதாகவே இந்த ரணில் விக்கிரமசிங்கவின் கைது அமைந்துள்ளது என்றார். (ம-7)

# ரணிலை வெள்ளி கைது செய்து பிணை மறுப்பது தவறானது

## சுமந்திரன் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெள்ளிக்கிழமை கைது செய்து பிணை வழங்குவதை எதிர்த்த முடிவு தவறானது என்று சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில் உள்ள தாவது,

அனைத்து நாட்டுத் தலைவர்களும் தங்கள் பதவிக் காலத்தில் செய்யப்பட்ட கடுமையான குற்றங்களுக்காக வழக்குத் தொடரப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெள்ளிக்கிழமை கைது செய்து பிணை வழங்குவதை எதிர்த்த முடிவு தவறானது.

யாரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. ஆனால் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றத்திற்காகப் பிணை மறுக்க வேண்டிய நேரமும் வலியுறுத்தலும் கேள்விகளை எழுப்பியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# விசேட சுற்றிவளைப்பு 5,077 பேர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (22) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5,077 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 21 பேரும் சந்தேகத்தின் பேரில் 724 பேரும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 236 பேரும் திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 189 பேரும் மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 67 சாரதிகளும் கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 23 சாரதிகளும் ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3817 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

# அடக்குமுறைக்குத் தயாராகாதீர்கள் எமது பொறுமைக்கும் எல்லையுண்டு

## அரசை எச்சரிக்கிறார் நாமல் எம்.பி

(கொழும்பு)

அரசாங்கம் இனிமேல் அடக்குமுறைக்குத் தயாராகக் கூடாது. எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு எனப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அளுத்கமவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றபின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை மறைக்க அரசியல் கைதுகள் மேற்கொள்ளப்படுகின்றது என்றார். (ம-7)

# அதிபத்த நாயனார் குருபூஜை நிகழ்வு

(அராலி)

தான் பிடிக்கும் மீனில் முதல் மீனை சிவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்து முதல் மீன் தங்க மீனாக வந்தபோதும் தன் பக்தி நெறி தவறாது நின்ற அதிபத்த நாயனாரது குருபூஜையானது இன்று ஞாயிற்றுக்கிழமை ஆயிலிய நட்சத்திரத்துடன் கூடிய பகல் 10.30 மணியளவில் அராலித்துறை மதவடி வீரபத்திரர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கொடியிறக்க நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்- சிவசாந்தன்)

# தொடரும் தபால் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம்

(கொழும்பு)

தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தம் நேற்று 6 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

மத்திய தபால் பரிமாற்றத்தில் குவிந்து கிடந்த தபால் பைகளைச் சட்டவிரோதமாக அகற்றியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டு தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அமைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் தபால் தொழிற் சங்கங்கள் கொழும்பில் உள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்கு முன்னால் சத்தியாகிரகப் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தது.

இலங்கை ஆசிரியர் சங்கம், தொழிலாளர் போராட்ட நிலையம் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் இந்த சத்தியாகிரகத்தில் இணைந்து கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டம் காரணமாக, மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தைச் சுற்றி விசேட பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

பொதிகளை அனுப்பத் தயாராகும் ஊழியர்களின் கடமைகளுக்கு சில குழுக்கள் இடையூறு விளைவித்ததை அடுத்து, பொலிஸார் குறித்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

19 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 17 ஆம் திகதி நள்ளிரவு தொடங்கிய பணிப்புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது.

இதேவேளை, பணிக்கு வராத அனைத்து அஞ்சல் ஊழியர்களும் தங்கள் பதவிகளை விட்டு வெளியேறியதாகக் கருதப்படுவார்கள் என்று தபால் மா அதிபர் ருவன் சத்குமார் அறிவித்துள்ளார்.

மேலும், குறித்த பணிப்புறக்கணிப்பு காரணமாக பொது மக்கள் தபால் சேவைகளை அணுகுவதில் குறிப்பிடத்தக்கச் சிரமங்களை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3334


Search for people, places and things Nagendram Home

### சவிஸ்யணா

அன்று- குறைந்த வருமானம் நிறைந்த நிம்மதி.
இன்று - அதிக வருமானம் குறைந்த நிம்மதி.
அன்று -கை வீசி நடந்தோம்.
இன்று -கைபேசியுடன் நடக்கிறோம்.
அன்று- படித்தால் வேலை.
இன்று -படிப்பதே வேலை.
அன்று -ஓடினோம் வயிற்றை நிறைக்க.
இன்று - ஓடுகிறோம் வயிற்றை குறைக்க
அன்று - உணவே மருந்து
இன்று- மருந்தே உணவு.

### நிதுஷ்

கையில் இருக்கும் போதும், அதை காலி செய்யும் போதும் தெரிவதில்லை.




### பதுமிதா

கடவுள்- என்ன வரம் வேண்டும்?
அமெரிக்கர் - ஒரு ரூம் நிறைய தங்கம் வேணும்.
ரஷ்யர்- ஒரு ரூம் நிறைய டைமண்ட் வேணும்
இலங்கை - அந்த இரண்டு ரூம் சாவியும் எனக்கு வேணும்...
எப்பிடி......



### விக்னேஸ்

English ல Hospital...
தமிழில மருத்துவமனை...
எங்கம்மா சொல்லும் இந்த ஆஸ்பத்திரி எங்கிருந்து வந்திருக்கும்....



### யுதீஸ்

வாழ்க்கைல விழுந்து எழுந்திருக்கிறத விட காலையில ஆறு மணிக்கு தூக்கத்தில இருந்து எழுந்திருக்கிறது தான் மிகவும் கஷ்டமா இருக்கு...



### மிதுளன்

பாக்கெட்ல ஒரு ரூபா கூட இல்லாம திரியும் போது வாழ்க்கை கற்றுத் தருமே ஒரு பாடம்.
அது மட்டும் சாகும் வரைக்கும் மறக்காது சேர்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காட்டுப்புலம்...

குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று சனிக்கிழமை (23) பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இதில் செம்பாடு கம்பர்மலையைச் சேர்ந்த பரமானந்தம் இராஜேந்திரன் (வயது-52) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடலில் 50 அடி தூரத்தில் சடலம் மிதந்த நிலையில் காணப்பட்டதாகவும் கரையில் துவிச்சக்கரவண்டி மற்றும் ஆடைகள் என்பன காணப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## வெட்டுக்காயங்...

டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ராமசாமி ராமாயி (வயது-70) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பெண்மணி வீட்டில் சடலமாகக் கிடப்பதனை அவதானித்த கிராமத்தவர்களால் நேற்று முன்தினம் (22) மாலை மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற மாங்குளம் பொலிஸார் கிளிநொச்சி தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு நீதிமன்ற மேலதிக நீதவான் எஸ்.எச்.மஹ்ரூஸ் சடலத்தினைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டதோடு உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவுகளிடம் ஒப்படைக்குமாறும் அறிவுறுத்தினார்.

மூதாட்டியிடமிருந்து நகை உள்ளிட்ட பொருட்களை களவாடும் நோக்குடன் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299,315)

## வடமராட்சி...

இடம்பெற்றுள்ளது.

இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி வடிவேல் என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளப் பகுதியில் அமைந்துள்ள உடப்பு பிரதேசத்தைச் சேர்ந்த நபருக்குச் சொந்தமான வாடியில் நேற்று முன்தினம் (22) இரவு இரு மீனவர்களுக்கிடையே கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

கைகலப்பு முற்றியதில் இருவருக்கும் இடையில் வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மற்றைய நபர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## ரணில் கைது...

னது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கவிந்த ஜயவர்தன மற்றும் மயந்த திசாநாயக்க ஆகியோரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா பொதுச் சபையில் இந்த முறைப்பாட்டை சமர்ப்பிக்கும் நோக்கில், நேற்று (23) கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் தற்போதைய அரசாங்கம் அரசியல் அடக்குமுறையைச் செயற்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## கைதான...

உடல்நிலையைக் கருத்தில் கொண்டு வீட்டிலிருந்து உணவு பெற அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ரணிலின் கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஜகத் வீரசிங்க தெரிவித்தார். (ம-7)

## தீவிர சிகிச்சைப்...

குற்றப்புலனாய்வுத் திணைக் களத்துக்கு வாக்குமூலம் வழங்கச் சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்று முன்தினம் இரவு வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை உடல் நலக் குறைவு காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவரைக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்குச் சிறைச்சாலை மருத்துவர்கள் தீர்மானித்தனர்.

இதனையடுத்து, சிறைச்சாலை தலைமையகத்தின் அனுமதியுடன் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## யார் தவறு...

சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டிருப்பது வரலாற்றினுடைய முதல் அத்தியாயமாகப் பேசப்படுகிறது. ஜனாதிபதியும் கைது செய்யப்படலாம் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது.

யார் தவறு செய்திருந்தாலும் அவர்களைத் தண்டிப்பதற்கு இலங்கையினுடைய சட்டம் தயாராக இருக்கின்றது என்பதை நிரூபித்திருக்கின்றது.

ஆனாலும் இந்தக் கைது கூட தென்பகுதி அரசியல் அரங்கிலே ஒரு வித்தியாசமான மாற்றங்களைக் கொண்டு வரக்கூடும் என்றார். (ம-7,315)


மஹஜன சம்பத — திகதி 2025.08.23 — சீட்டிழுப்பு இலக்கம் 5930 — S 9 8 1 8 8 7
அத சம்பத — S 1 8 8 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0505

சுப தவசக் — திகதி 2025.08.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0046 — மேஷம் 02 14 34 41

தன நிதானய — திகதி - 2025.08.23 — சீட்டிழுப்பு இலக்கம் - 1960 — J 20 22 32 34 J — Double Chance 44958

மெகா பவர் — திகதி 23/08/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2278 — T 20 — 10 39 42 62

ஜய — திகதி 2025.08.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0198 — T 1 4 7 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4172 — சீட்டிழுப்பு திகதி 23.08.2025 — Z 01 07 14 55 — Z

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.08.23 — சீட்டிழுப்பு இலக்கம் 1239 — துலாம் 07 22 25 44 துலாம் — 75286

சுபிரி வாசனா — உத்தியோகபூர்வ முடிவுகள் — 23.08.2025 — வெற்றி வாரம் 0638 — A — 2 2 8 8 5 4 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,639,029.60

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2904 — சீட்டிழுப்பு திகதி 2025.08.23 — தினம் சனிக்கிழமை — 02 23 28 72 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,166,171.20

சனிதா — திகதி 23.08.2025 — வெற்றி வாரம் 5065 — 37 44 48 71 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,539,470.40

சசிரி — வெற்றி வாரம் 0754 — சீட்டிழுப்பு திகதி 23.08.2025 — சனிக்கிழமை — 13 17 39 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4616 — சீட்டிழுப்பு திகதி 23.08.2025 — தினம் சனிக்கிழமை — 05 06 31 51 ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,536,841.60

லக்ன — 2080 — 23.08.2025 சனிக்கிழமை — T 31 43 48 62 64 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.589,600,540.60

அத கோடிபதி ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம் 2730 — சீட்டிழுப்பு திகதி 2025.08.23 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.85,062,812.80 — 17 21 22 38 E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா பொதிகள் சேவை



யாழ்ப்பாணம்

UK - 1,350/- 16+
France - 2,050/- 16+
Germany - 1,950/- 16+
Canada - 2,600/- 16+

தேவை
வேலையாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
யாழ்.நகரத்துக்கு அண்மையில் இருப்போர் விரும்பத்தக்கது. (5063)

**075 330 5500 / 070 330 5500**

## வெளிநாட்டில் (canada) இல்வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை

1981(Divorce), 1990, 1990(Divorce), 1993, 1995(02), 1997, 1999, ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உள்ளூர் மணமகன்கள் தேவை. (C-3730)

**077 041 3462, 077 408 8241**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## Principal Sabalingam Trophy

# T - 20 Third Encounter - 2025

**Jaffna Central College** VS **Jaffna Hindu College**

Time - 10.00 A.M Date - 25.08.2025
Venue - Jaffna Central College

Sponsored By:
Sabalingam Jeyalingam Family

(5079)



## பணியாளர்கள் தேவை

காட்வெயார் கடையில் விற்பனையில் அனுபவமுள்ள, பழக விரும்பும் பணியாளர்கள் தேவை.
தங்களது வதிவிடச் சான்றிதழ் மற்றும் தகைமைச் சான்றிதழுடன் நேரில் சமூகம் தரவும். (C-3713)

குரு காட்வெயார்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

UK - 1320/=
Australia - 2220/=
France - 2080/=
Canada - 2570/=
Germany - 1920/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி (1475)

## முகாமையாளர் தேவை

பருத்தித்துறையில் 10 அறைகள் கொண்ட Guest House ஒன்றுக்கு 40 - 60 வயதுக்கு உட்பட்ட பருத்தித்துறையை அண்மித்த முகாமையாளர் தேவை. (1463)

**077 163 2330**

## SB TRAVELS AND TOURS PVT LTD

சகல நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களை குறைந்த விலையிலும் மற்றும் யாழ்ப்பாணம், கொழும்பிலிருந்து இந்தியாவிற்குச் செல்ல Rs.37,900 இருந்தும் (C-3724)

தொடர்புக்கு : 021 222 8555, 076 691 1082
கொழும்பு : 011 244 6666, 077 108 3480
இணையத்தளம் : www.sbtravels.lk (Conditions apply)

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
யா/சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை

## பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம்

காலம் :
31.08.2025 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30
இடம் :
பாடசாலையின் பிரதான மண்டபம்

புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதிபர்
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
யா/சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை

செயலாளர்
பழைய மாணவர் சங்கம் (5115)

Power Hands Plantation (Pvt) Ltd

# JOB VACANCY

முழுநேர / பகுதி நேர வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் பிராந்திய அலுவலகத்தினைக் கொண்ட Power Hands Plantation (Pvt) Ltd கீழ்வரும் பதவிகளுக்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றனர்.

- SALES EXECUTIVES - 30 POSITIONS
- BUSINESS DEVELOPMENT MANAGERS - 10 POSITIONS

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

- 21 - 55 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- O/L, A/L பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (5071)



தொடர்புகளுக்கு - 077 391 7439
Email ID - raviain@gmail.com
No.34, வேம்படி வீதி,
3ம் மாடி எல்.ஐ.சி கட்டிடம் யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு (1485)

**077 695 4530**

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3726)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## காணி வீடு விற்பனை கொள்வனவு

யாழ்ப்பாணம், தீவகம் மற்றும் பலாலி, A9, K.K.S. பருத்தித்துறை வீதிகளிற்கு அருகில் வீடு, காணி விற்கவுள்ள உரிமையாளர்கள் மற்றும் வாங்கவுள்ள வர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். (1478)

**076 311 9485**
**076 050 3863**

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நடராஜா பத்மநாதன்**
24.08.2025

தோற்றம் 09.04.1931
மறைவு 30.08.2011

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுடன் சங்கமித்து ஆண்டுகள் பதின்நான்கு
ஆன போதும் ஆறவில்லை உங்கள் நினைவுகள்
மாண்டவர் மீண்டு வருவதில்லை என்பது நிஜம்
ஆனாலும் நீண்டிருக்கும் உங்கள் குடும்பத்திற்கு
தொடர்ந்து வழிகாட்டுங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!! (C-3728)

இல.103/1,
கோவில் வீதி, நல்லூர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 168/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | Max 3Kg |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | Max 3Kg |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2650/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 188/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 260/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1100/= | |
| 1Kg கடலை | - 380/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |

Max 01
400g Anchor 1140/= ~~1260/=~~



1Kg சன்லைட் சவர்க்காரம் 280/= ~~320/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (1486)

Happy Supermarket
0777 8080 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் இல.191 பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.